R.R. No. N|| -3- 1924.

Y592
N24

# ஜாதி நிர்ணயம்.



28 AUG 1924

இஃது

ஸ்ரீ கும்பகோண நகரின்கண் விளங்கும் ஸ்ரீ காஞ்சி காம
கோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதா
சார்யஸ்வாமிகளவர்களின் அபாரத்தானுக்கிரகம்
பெற்றவரும் மஹாமஹோபாத்தியாய பிருத
பூஷிதர்களான பிரும்மஸ்ரீ ப. கணபதி
சாஸ்திரிகள் அவர்களுடைய சிஷ்யரும்
மஹோபதேசக, கவிரத்ந, பிருதாங்கித
ரும் ஆர்யதர்மப் பத்திராதிபருமான
ஸ்ரீ மடம் ஆஸ்தான வித்வான்
ப. பஞ்சாபகேச சாஸ்திரியால்
இயற்றப்பட்டு,

---

லோகோபகாரார்த்தமாய்
கும்பகோணம்,
ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்,
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1924.

Y592
(NT) N24
Acc No. 1871
dt 29.12.77
301.44
பக் - [illegible]
1871
1871

28 AUG 1924

உ

॥ श्रीगुरुभ्यो नमः ॥

# ஜாதிநிர்ணயம்

वेदादिप्रथितप्रमाणवचनैः प्राचीनविद्वद्वरैः
प्रोक्तो जातिविभाग एष जनिना जातो सहेति स्फुटम् ।
अज्ञात्वा कलिदोषदूषितमनाः केचिद्वदन्त्यन्यथा
तच्चासाध्विति सत्प्रमाणवचनैरावेद्यते सांप्रतम् ॥

உலகில் தற்காலம் "தேசமுன்னேற்றத்தைக்கருதிப் பாடுபடுகிறோம்" என்று எங்கும்பறையறைந்துகொண்டு மேனாட்டு நாகரிகத்தையே சிறந்ததெனக்கொண்ட சிலர், தவமஹிமையால் முக்காலத்தையும் "உள்ளங்கை நெல்லிக்கனி" போல் அறிய வல்லவர்களான விசேஷ சக்திவாய்ந்த மஹான்களான மகரிஷிகளாற்கூட எச்சமயத்தில் உண்டானதென்பதைப்பற்றி நினைப்பதற்குக்கூட இயலாததும், அநாதிகாலந்தொடங்கி நம் தேசக்ஷேமத்திற்கு இன்றியமையாத ஸாதனமாய் விளங்கிவந்ததுமான, வர்ணாச்ரம தர்மப்பிரிவுகளையும், அநாதியான வேதங்களையும், அவரவர்களுக்குத் தோன்றியவாறு நிலையற்ற பலவாறான காலங்களைக் கற்பிக்கிறார்கள். ரிக்வேதகாலத்தில் ஜாதிப்பிரிவேற்பட்டதென்றும், யஜுர்வேதகாலத்திலேற்பட்டதென்றும், ஓர் அரசனைக் குறிப்பிட்டு அவன்காலத்திலேற்பட்டதென்றும், இவையாவும் கட்டுப்பாடு; ஒரே ஜாதிதான் கடவுளால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்றும், மத்தியில் ஏற்பட்ட இந்த ஜாதிவேற்றுமையாற்றான் நம்தேசம் மிகவும்கஷ்டமானநிலைக்கு வந்துவிட்டதென்றும், இதற்கு நம் சாஸ்திரங்களில் சரியான

ஆதாரம் யாதொன்றுமில்லையென்றும், சாஸ்திரங்களின் கருத்தை உற்றுநோக்கின், அவரவர்களின் கர்ம, குணம், இவைகளை முன்னிட்டு இப்பிரிவு கற்பிக்கப்பட்டதென்றும், பலவாறாக ஒருவர்போல் ஒருவர் சொல்லாமல், பற்பலவிதங்களாய் இன்னவிதமென்று நிலைபெறாமல் ஆங்காங்கு ஆரவாரம்செய்துகொண்டிருக்கின்றனர். இதை நானறிந்தும், எனது நண்பர்களிற் சிலர் இதுவிஷயமாய் எனதபிப்பிராயத்தை இப் பத்திரிகையின் வாயிலாக வெளியிடவேண்டுமென்று வற்புறுத்தியும், இதுவரையில் இதற்கு உசிதமான பதிலெழுதாமலிருந்ததற்கு அவகாசக்குறைவே காரணமாகும். இதுவிஷயமாகவே, சென்ற தை-மீ 18-உ வெளிவந்த ஆரியதர்மம் 3-வது சஞ்சிகையில் தண்டமிழ்த் தொண்டரவர்களும் தமக்குநிகழும் சங்கையை விலக்கவேண்டுமென்று குறிப்பிட்டுக் கேட்டிருப்பதால், இனியும் எனதபிப்பிராயத்தைத் தெரிவிக்காமலிருப்பது தவறெனக் கருதி நம் சாஸ்திரங்களையே முக்கிய ஆதாரமாகக்கொண்டு சிற்றறிவிற்கெட்டியவரையில் இவ்விஷயத்தைப்பற்றிய எனது அபிப்பிராயத்தை வெளியிட முன்வந்தேன்.

வேதங்கள், அவைகளைப் பின்தொடரும் ஸ்மிருதிகள், இதிஹாஸங்கள் முதலியவைகளின் அபிப்பிராயத்தைக் கவனிக்குங்கால், ஜாதி என்பது அந்தந்தப் பிராணிகளின் பிறவியிலேயே கடவுளால் ஏற்பட்டதென்றும், பிறவியால் ஒருஜாதியிலிருக்கும் ஒருவனுக்கு மத்தியில் எத்தகைய சிறந்தகுணங்கள் நேர்ந்தாலும், எத்தகைய கர்மானுஷ்டானங்களிருப்பினும், பிறவியில் வந்த ஜாதி மாறி வேறுஜாதி ஏற்படாதென்றும் தெரிகின்றது. இவ்விஷயத்தில் வேதங்கள் எப்படி அபிப்பிராயப்படுகின்றனவென்பதை முன்பு விசாரித்து, முறையே மற்றப் பிரமாணங்களையும் கவனிப்பாம்.

## ஜாதி அநாதியென்பதே வேதங்களின் கருத்து.

பிராம்மண, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திர, என்கிற நான்குஜாதிகளும், அததற்குரிய குணம், தொழில் முதலியவைகளு



டன் ஈச்வரனால் ஸிருஷ்டிசெய்யப்பட்டு அநாதிகாலமாயிருந்து வருவதாகவே ஹிந்துக்களுடைய பிரமாணக்ரந்தங்களாகிய சுருதி, ஸ்மிருதி முதலியவைகளிலிருந்து ஸ்பஷ்டமாக வெளியாகிறது. இதற்கு மாறாகத் திருத்தக்காரர்கள் ஜாதிபேதங்கள் ஆதிகாலங்களில் கிடையாதென்றும் பின்னால் அதாவது ஆரியர்கள் மத்யஏஷ்யாதேசத்திலிருந்து இந்தியாவில் குடியேறிய பிறகே ஏற்பட்டனவென்றும் வாதித்துவருகிறார்கள். இவர்களுடைய வாதத்திற்கு அநுகூலமாக ரிக்வேதம் முதலியவைகளிலிருந்து விபரீதபிரமாணம் ஏதோ எடுத்துக் காட்டப்படுகிறதுடன் விசேஷமாகத் தற்போதிய மேதாவிகளால் எழுதப்பட்ட தேசசரித்ரக்ரந்தங்களே முக்கிய ஆதாரங்களாகத் திருத்தக்காரர்களாலும் மற்றவர்களாலும் எடுத்துக் காட்டப்படுகிறது. ஹிந்துதேசசரித்திரத்தை எழுதிய ஐரோப்பியர்கள் பலரும் சிலஹிந்துக்களும் ஜாதிவ்யவஸ்தைகள் வேதகால இந்தியாவில் கிடையாதென்றும் அதனாலேயே அக்காலத்தில் ஜாதிபேத மற்ற விவாஹாதி காரியங்கள் ஸாதாரணமாய் நடந்து வந்தனவென்றும் தைர்யமாய் எழுதிவிட்டார்கள். இவ்விஷயங்களைப் பற்றி ஹிந்துதேசசரித்திரம் எழுதுவதையே ஜீவனமாகக் கொண்ட ஈ. மார்ஸ்டன் என்கிற ஆங்கிலேயர் தமது சரித்திரப்புஸ்தகத்தில் சொல்லியிருப்பதை நாம் கவனிக்கவேணும். அவர் தனது கிரந்தத்தில் பின்வருமாறு சொல்லுகிறார். வேதகாலத்தில்ஜாதிபேதங்கள் கிடையாது. அவரவர்களுடைய தொழிலை அநுஸரித்தே ஜாதிஏற்பட்டதாகத் தெரிகிறது. ஒரே குடும்பத்தில் ஒருவன் பிராம்மணனாகவும் மற்றொருவன் க்ஷத்திரியனாகவும் தொழிலையநுஸரித்து வ்யவஹரிக்கப்பட்டு வந்தார்கள். இவ்விஷயத்திற்கு அடியில் குறிப்பிட்ட அர்த்தமுடைய ரிக்வேதமந்திரமானது ( 10-4-112 ) பிரமாணமாய் விளங்குவதைக்காணலாம். அதாவது—

ஒருரிஷிசொல்லுகிறார்— " நான் கவி அல்லது கில்பியாக இருக்கிறேன். என்னுடைய பிதா வைத்தியர், என்தாய் மாவு

அவைப்பவள். இப்படியாக நாங்கள் திரவிய ஆசையால் காக்கவிதத்தொழில் உள்ளவர்களாக இருக்கிறோம். இந்த மந்திரத்தின் அர்த்தத்தை ஊன்றிப்பார்த்தால் நாம் இழிச்சொல்லியது நன்றாகவிளங்கும்.'' இவ்வாறு மார்ஸ்டன் என்பவர் சொல்லுகிறார். இதுபோல் மாக்ஸ்முல்லர் ஸர் ஆல்ப்ரெட்லயல் ஆர். ஸி. தத்தர் முதலியவர்களும் பற்பல ஹேதுக்களைக்கொண்டு ஜாதிபேதம் பின்னால் கற்பிக்கப்பட்டதென்று விமர்சிக்கிறார்கள். இவர்களுடைய விமர்சபாண்டித்யத்தைப் பற்றிநாம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. இதை பிராமணசரணர்களான ஆஸ்திகஹிந்துக்கள் எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளமுடியாது. நமதுபிள்ளைகள் வேறுவகையன்றி இவ்விதசரித்திரங்களைத்தகைப்படிக்கநேரிட்டாலும் இவைகளில் சொல்லப்பட்டுள்ளவிஷயங்கள் எல்லாவற்றையும் நாம் நம்பிவிடுவதற்கில்லை. அதிலும் ஜாதிபேத விஷயத்தைப்பற்றிய முக்கியமான விஷயத்தில் இச்சரித்திரங்களை நம்பி நாம் ஏமார்ந்துபோகக்கூடாது. தவிர தற்காலம் வழங்கிவரும் சரித்திரப்புஸ்தகங்களெல்லாம் அநேகமாக நமது மதரகஸ்யங்களை எவ்விதத்திலும் அறியச்சக்தியற்றவர்களும் நம்முடன் நல்லபழக்கமற்றவர்களுமான விஜாதியர்களாலேயே எழுதப்பட்டனவாகையால் இவைநமது நாகரீகமேன்மைகளை வெளியிடக்கூடியவையல்லவென்றும் தேசமெங்கும் பலபுத்திமான்கள் இப்போது வெளியிட்டுச் சொல்லிவருவதையும் இங்கு மறக்கக்கூடவில்லை. "ஸ்வாமி விவேகானந்தர்" என்பவர் அமெரிக்காதேசம் சென்றிருந்தபோது அங்குள்ள பாடசாலைகளில் ஹிந்துசரித்திரங்கள் போதிக்கப்பட்டுவருவதைப் பார்த்து வெகு வருத்தமும் கோபமும் அடைந்தாராம். ஹிந்துஸ்திரீகள் தங்களது குழந்தைகளை உயிருடன் நதியில் போடுவதுபோலவும், ஹிந்துக்கள் தங்களது ஸ்திரீகளைக் கத்திகொண்டு வெட்டுவதுபோலவும், இன்னுமிம்மாதிரி பல அநாகரீகங்களை வெளிப்படுத்தக்கூடிய சித்திரப்படங்களுடன் நமது சரித்திரங்கள் அங்கேபோதிக்கப்படுகின்றனவாம். தவிர இரண்டொரு வருஷங்களுக்கு முன் சீமையில் சென்னை பாரிஸ்டரொ



ஞர் ஏதோ உபந்யஸித்துக்கொண்டிருக்கும்போது பல ஆங்கிலேயர்கள் அவரைப்பார்த்து "இந்தியாவில் நீங்கள் குழந்தைகளை உயிருடன் ஆற்றில் போடுவது வழக்கமுண்டா" என்று கேட்டார்களாம். அதற்கு "இந்தியாவில் குழந்தைகளை ஆற்றில் எறிந்துவிடுவது வாஸ்தவமானால், எத்தேசத்திலும் காணமுடியாத ஜனத்தொகை இந்தியாவில் இருக்கமுடியுமாவென்று யோசியுங்கள்" என்று அக்கிணற்றுத்தவளைகளுக்கு அவர் பதில் சொன்னாராம். இத்தகைய கட்டுக்கதைச் சரித்திரங்கள் இத்தருணத்தில் கூட நமது பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டுத்தான் வருகின்றன. இதனடியாக ஸம்பவிக்கும் அநர்த்தமென்னவென்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை. வாஸ்தவத்தை யோசித்துப்பார்த்தால் இம்மாதிரி குழந்தைகளைக்கொல்லும் குரூரகாரியம் நமது தேசத்தில் எக்காலத்திலாவது நடந்ததாக நமது புராணாதிகளிலிருந்து வெளியாகின்றதா? ஒருக்கால் ஸகரபுத்திரனான "அஸமஞ்ஜன்" என்பவன் இம்மாதிரி காரியங்கள் செய்ததாக ராமாயணத்திலிருப்பதை ஆதாரமாகக்கொண்டு சரித்திரக்காரர்கள் சொல்லுவார்களானால் அதுமிகவும் தகாது. அவன் குற்றவாளியென்று தேசப்பிரஷ்டம் செய்யப்படவில்லையா? தவிர ஒருதேசத்தில் யாரோ இரண்டொருவர் தகாதகாரியங்களைச் செய்ததற்காக தேசம் முழுவதிலும் இம்மாதிரி காரியம் உண்டென்று எழுதத்துணிந்தது எப்படி? இரண்டொருவருடைய காரியத்திற்கு தேசம் முழுவதும் ஜவாப்தாரியாகமுடியுமா? இங்கிலாந்தில் ஒருகாலத்தில் முதலாவது "சார்லஸ்" என்கிற அரசன் சிலஜனங்களால் கொல்லப்பட்டுப்போனான். இதைக்கொண்டு அத்தேசஜனங்களுக்கே ராஜவிச்வாஸம் கிடையாதென்று எந்தமூடனாவது சொல்லத்துணிந்துவிடலாமா? ஆகையால் ஸ்வாமி விவேகானந்தர் சொல்லியபடி இந்தியாவிலிருந்து திரும்பிப்போகும் கெட்டஎண்ணங்கொண்ட சில பாதிரிகளும் சிவில்யன்களும் கொடுக்கும் தப்பான முகாந்திரங்களையே முக்கிய ஆதாரமாகக்கொண்டு ஹிந்துக்களுடைய நாகரிகங்களையும் மதரஹஸ்யங்க

ளையும் இழ்புடுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்ட இப்
சரித்திரங்களை நாம் முழுவதும் நம்பிவிடுவதற்கில்லை. இ
இழ்ச்சொல்லியபடி நமது கௌரவத்திற்கும் நாகரிகத்தி
கல்மஷத்தையுண்டாக்கக்கூடியதும்; எவ்வித மூலப்பிர
மற்றதுமான காரியங்களை நமது தலையில் சுமத்தத்து
" மார்ஸ்டன் " போன்றவர்கள் அநாதியான ஜாதிபேதத்
பற்றி நமது பிரமாணங்களுக்கு நேர்விரோதமாக எழுதி
யதை நாம் எக்காலத்திலும் நம்பமுடியாது. மத்ய ஏஷ்ய
ருந்து வந்தபிறகே ஜாதிபேதமேற்பட்டதாகச் சொல்லு
கள். மத்ய ஏஷ்யாவிலிருந்து வந்து குடியேறியதாகச் செ
லும் கதையே பிரமாணமற்றதென்று, ஹிந்துக்களா
ஐரோப்பியர்களாலும் கொண்டாடப்பட்ட பாண்டித்யமு
வரும் லோகமான்யரென்று கியாதிபெற்றவருமான ஸ்ரீ
பாலகங்காதரதிலகர் பல பிரமாணங்களுடன் வெளியிட்டு
கிறார். இதற்கு சரித்திரக்காரர்கள் என்ன பதில் சொல்லப்
கிறார்கள்? இவ்விஷயத்தைப்பற்றி நவீனசரித்திரவிமர்சகர்க
குள்ளேயே பலமான அபிப்பிராய பேதங்களிருப்பதையும்
மறந்துவிடுவதற்கில்லை. ஆர்யர்கள் மத்ய ஏஷ்யாவிலிரு
கிளம்பி இந்தியாவில் குடியேறியதுபோல் அவர்களில்
மேற்குமுகமாய்ச்சென்று இடாலி, பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்
முதலியதேசங்களிலும்குடியேறி அங்கெல்லாம் தங்களது
கங்களைப் பரவச்செய்ததாகவும் சரித்திரம் கூறுகிறதல்ல
இவ்விஷயத்தை மேற்றிசையார் ஒப்புக்கொண்டனரா? இ
அத்தகைய சரித்திரம் மூலமற்றதென்கிற காரணத்தினாலே
ஆரியர்கள் அங்கு குடியேறியதையும் அவர்களால் அங்கு ந
கம் பரவியதென்பதையும் ஒப்புக்கொள்ள மேற்றிசையார்
மதிக்கவில்லை. ஐரோப்பாவிலுள்ள பல மனுஷ்யவர்க்க
சாஸ்திரிகளும் (Anthropologists) இவ்விஷயத்தை ஆராய்
செய்து இது மூலமற்றதென்று தள்ளிவிட்டார்களாம். அ
லும், ஜர்மெனியிலுள்ள பலமேதாவிகளும் ஒன்றுசேர்
வேதங்களை எவ்வளவோ பரிசோதித்துப் பார்த்தும் இத



ப்ரமாணமொன்றுமில்லையென்று நிர்ணயித்தார்களாம். ஆகவே மத்ய ஏஷ்யாவிலிருந்து ஆரியர்கள் மேற்கு தேசங்களில் குடியேறியதாகிய ஒருபாகம் ஒப்புக்கொள்ளப்படாமலிருக்கையில் இந்தியாவில் அவர்கள் குடியேறியதாகச் சொல்லப்படும் கதை மட்டும் எப்படி ஒப்புக்கொள்ளத்தக்கதாகும்? ஆனதால் ஆரியர்கள் இந்தியாவில் வசித்துவந்த பூர்விகஜாதியர்கள்தானென்று நவீன சரித்திரக்காரர்கள் முடிவுசெய்கிறார்கள்.

ஆனால் " மாக்ஸ் முல்லர் " ரிக்வேதத்தில் காணப்படுகிற " अनास " என்கிற பதத்திற்கு " மூக்கில்லாதவர்கள் " என்கிற அர்த்தத்தை ஒப்புக்கொண்டு இந்தியாவிலிருந்த பூர்விக ஜனங்கள் தட்டை மூக்குள்ளவர்களென்றும், ஆரியர் கூறிய மூக்குள்ளவர்களாகையால் அவர்கள் இந்தியாவில் புதிதாகப் புகுந்தவர்களென்றும் செய்திருக்கும் வாதத்தையும், மற்ற யுக்திகளையும் நவீனர்கள் பலமான ஆதாரங்களுடனும் யுக்தியுடனும் மறுத்து ஆக்ஷேபித்திருக்கிறார்கள். இவ்விஷயமான விவரங்களை விஸ்தாரபயத்தால் நாம் இங்கு எடுத்துச் சொல்லப்போவதில்லை. எப்படியிருந்தாலும் தற்போது நம்தேசத்தில் கிளம்பியிருக்கும் ஆதித்திராவிடர், திராவிடர் போன்ற ஒவ்வொரு வகுப்பாரும் தம்தம் இனத்தார்கள்தான இந்தியாவில் பூர்விகஜனங்களென்றும் மார்தட்டிச்சொல்லிக்கொள்ளும்போது, அவர்கள் தங்கள் மூக்கைத் தொட்டுப்பார்த்துக்கொண்டு பேசும்படி நேரிட்டுவிடுமாகையால் மாக்ஸ்முல்லருடைய அர்த்தத்தைப்பொதுவாக ஒருவரும் அங்கீகரிக்கவில்லை. இக்கதைகளின் வாஸ்தவம் எப்படியாயினும் இருக்கட்டும். அதனால் நமக்கொன்றுமில்லை. ஆனால் இதுபோன்றதோர் சிறிய விஷயத்திலேயே சரித்திரக்காரர்களுக்குள் கலகச்சண்டைகள் இருக்கும்போது ஹிந்துக்களின் மேன்மையான நாகரிகத்திற்கே மூலமாயுள்ள ஜாதிவிஷயம் போன்ற பெருத்தவிசாரங்களில் பிரமாணவிருத்தங்களான சரித்திரக்கதைகளை ஆஸ்திக ஹிந்து எவனும் நம்பக்கூடாதென்பதற்காகவே நாம் இவ்வளவு எழுத நேரிட்டது. இப்படி நாம் எழுதுவதைக்கொண்டு சரித்திரங்களை நாம் முற்றிலும்

த்வேஷிப்பதாக யாரும் எண்ணக்கூடாது. சரியான உண்மையைத் தெரிவிக்கக்கூடிய சரித்திரங்களால் பல நன்மைகளுண்டென்பதை நாம் மறுக்கவில்லை. ஆயினும் நமது கௌரவம் வாய்ந்த பிரமாணங்களும் சரித்ரங்களும் ஒருவிஷயத்தில் விரோதித்துக்கொள்ளும்போது மநு, பராசரர் போன்ற நமது முன்னோர்களுடைய வார்த்தைகளைப் புறக்கணித்துவிட்டு எவ்வித மூலமற்ற சரித்ரங்களை நாம் நம்பிவிடுவது அடுக்குமா? ஆகையால் நமது பிரமாணங்களுக்கு சிறிதும் விரோதிக்காத சரித்திரங்களை ஒருவாறு நாம் நம்பலாமேயல்லாது பிரமாண விருத்தமான சரித்திரத்தை ஒரு க்ஷணம் கூட நாம் நம்பிமோசம் போகக்கூடாதென்பதே நமது வாதமாகும்.

இதுபோல், வேதகாலத்தில்ஜாதிபேதமில்லையென்று இவர்கள் சொல்லுவதற்குப் பிரமாணம் என்ன? இவ்விஷயத்தைத் தெரிவிக்கக்கூடிய கல்வெட்டுகளாவது, தாமிர சாஸனங்களாவது, உண்டானால் ஏன் அவைகளை இவர்கள் வெளிப்படுத்தவில்லை? இது இவர்களுடைய புத்திசாதுர்யத்தால் ஊஹிக்கப்பட்டதென்றால் அது நமதுபிரமாணங்களுக்கு நேர் விருத்தமாயிருப்பதால் ஒப்புக்கொள்ளத்தக்கதில்லை. வேதகாலத்தில் ஜாதிபேதமில்லையென்று சொல்லுகிறார்கள். இங்கு "வேதகால"மென்கிறதோர் காலத்தையே நாம் ஒப்புக்கொள்ளுவதற்கில்லை. வேதங்கள் அநாதியானவை. அவை பிரசாரத்திலில்லாத காலமென்று கிடையாது. ஸ்ருஷ்டிகாலத்திற்கு முன்காலம்முதல் இன்றுவரையிலும் வேதம் பிரசாரத்திலிருந்துவருவதாகவே நமது பிரமாணங்களால் வெளியாவதால் எல்லாம் வேதகாலந்தான். இம்மாதிரி ஸ்வச்சந்தமாக காலவிபாகம் செய்துகொண்டதும் பிரமாண விருத்தமாதலால் ஒப்புக்கொள்ளத் தகுந்ததில்லை. ஏனெனில்,பிரும்மா உலகத்தைஸ்ருஷ்டிசெய்யும்போது பிராணிகளை எப்படி ஸ்ருஷ்டிப்பது, அவைகளுக்குப் பெயர் என்னயிடுவது, இதுபோன்ற ஸகலவிஷயங்களையும், வேதங்களிலிருந்து தாம் அறிந்துகொண்டு அவைகளில் சொல்லப்பட்டிருக்கிற மாதிரியைப்பின்பற்றியே உலகஸிருஷ்டியைச் செய்தாரென்று பராசரர்



नामरूपञ्च भूतानां कृत्यानाञ्च प्रपञ्चनम् ।
वेदशब्देभ्य एवादौ देवादीनां चकार सः ।
ऋषीणां नामधेयानि यथा वेदश्रुतानि वै ॥

என்பதால் வெகு ஸ்பஷ்டமாகச் சொல்லியுள்ளார். இப்படி உலகஸிருஷ்டிக்கே வேதம் மூலமென்று நமதுபிரமாணம் உத்கோஷிப்பதால் ஸிருஷ்டிகாலத்திற்கு முன்காலம் முதற்கொண்டே வேதம் பிரசாரத்திலிருப்பதாக நன்குவிளங்குகிறது. இத்தகைய பிரமாணத்தை பாதிக்கக்கூடிய வேறு பிரமாணமிருந்தாலன்றி, பூர்வபக்ஷிகளுடைய யுக்திகளாவது வாதங்களாவது எந்த விவேகமுள்ள மனிதனும் ஒப்புக்கொள்ளத்தக்கதில்லை. ஆகையால், வேதகாலமென்று ஒரு காலத்தை நிர்ணயிப்பதும் அஸங்கதமாகும். இனி வேதகாலத்தில் ஜாதிபேதமில்லாமல் குணகர்மங்களை யனுஸரித்தே அது உண்டானதென்பதற்குப் பிரமாணமாக எடுக்கப்பட்ட ரிக்வேத மந்திரத்தை விசாரிப்போம். தன்னுடையகக்ஷிக்கு எவ்விதத்திலும் ஸாதகமற்றதான ஒரு மந்திரத்தை சரித்திரபுருஷர் தனக்கு ஸாதகம்போல் காட்டியிருப்பது மிகவும் அஸங்கதமானது. இது மந்திரமானது தஜர் யாகத்தில் ஸோமரஸத்தைப் பிழியும் ஸமயத்தில் யஜமானனால் உபயோகிக்கவேண்டியதாக விதிக்கப்பட்டிருக்கிறது. யஜமானன் ஸோமலதையைப் பார்த்து ஸ்துதிசெய்யும்போது "ஹே ஸோமனே! நான் செய்கிற இந்த யாகத்தில் இந்திரதேவதையின்பொருட்டு நீ ஸோமரஸமாகஸ்ரவிக்கவேணும்" என்று பிரார்த்தித்து, ஸோமதேவதைக்கு தன்னிடம் கிருபை ஏற்படவேண்டியதற்காகத் தன் குடும்பத்தினர் எப்போதும் யக்ஞத்திற்கே ஈடுபட்டுச் செய்துவரும் கைங்கரியங்களைக் குறிப்பிடுகிறான், "நான் யக்ஞத்திற்கு வேண்டிய ஸ்தோத்ரசஸ்திராதி மந்திரங்களைச் சொல்லுகிற கவியாயிருக்கிறேன். எனது பிதா யாகங்களில் மந்திரதந்திரலோபம் ஏற்படாமல் பாதுகாத்து வருகிற வைத்தியன்போன்ற ஓர் "ரித்விக்" என்றும், என்தாய் யக்ஞத்திற்குவேண்டிய புரோடாசாதி ஹவிஸ்ஸுக்காக மாவு அரைத்துக்கொடுப்பவள் என்றும், ஆகவே, குடும்பத்தில் ஒவ்-

வொருவரும் தனித்தனியாக யக்ஞத்திற்கே சுச்ருஷைசெய்கிறவர்களாயிருப்பதால், 'பசுவைப் போல உன்னையே நாங்கள் அண்டியிருக்கிறபடியால், என்னுடைய இஷ்டத்தை நீ பூர்த்தி செய்யவேணு" மென்று பிரார்த்திக்கிறான். இங்கு சரித்திர நிபுணர்கள் கூறிய அர்த்தத்தை எடுத்துக்கொண்டால் யஜமானன் ஸோமலதையைப் பார்த்துப் பிரார்த்திப்பதும், அதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியான தொழிலும் ஜாதியும் உள்ளவர்களென்று சொல்லுவதும், குழந்தைப்பேச்சைப்போல் முன்பின் ஸம்பந்தப்படாமலும், அஸங்கதமாயுமிருப்பதை யாவரும் எளிதில் அறியக்கூடும். தவிர, ஹே ஸோமதேவனே! நீ இந்திரன்பொருட்டு ரஸமாக வெளிவர வேணுமென்று சொல்லுகிற மந்திரத்தின் கடைசிபாகம் சரித்திரக்காரர் சொல்லும் அர்த்தத்தில் எவ்விதமும் சேரமுடியாமல் தனித்துநின்று விடுவதையும், முன்பின் விரோதத்தையும், புத்திமான்கள் விமர்சித்துப்பார்த்தால் அவர்கள் சொல்லிய அர்த்தம் மிகவும் பொருத்தமற்றதென்று நன்றாக விளங்கக்கூடும். ஆகையால் இந்த மந்திரத்தைக்கொண்டு வேதகாலத்தில் ஜாதிபேதமில்லை யென்றும், அது குணகர்மங்களை யனுஸரித்தே வருமென்றும், சொல்லும் ஆக்ஷேபமும் பிரமாணமும் விபரீதமென்றே முடிக்கது.

## வேதங்களில் ஜாதிபேதத்தைப் பற்றிய விவரணம்

இனி ஜாதிபேதத்தைப்பற்றி வேதங்களில் சொல்லப்பட்டிருப்பதை நிரூபித்து அவை ஜன்மஸித்தங்கள் தானென்பதை பிரமாணபுரஸ்ஸரமாகக் காண்பிப்போம். ரிக்வேதத்திலும், யஜுர்வேதத்திலும் காணப்படுகிற புருஷஸூக்தமென்கிற வேதபாகத்தில், "விராட்புருஷனுடைய முகத்திலிருந்து பிராமணனும், கை, தொடை, கால், இவைகளிலிருந்து வரிசையாக க்ஷத்ரிய, வைசிய, சூத்திரர்களும், ஸிருஷ்டிக்கப்பட்டதாக ஸ்பஷ்டமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. "இங்கு கால்களிலிருந்து சூத்திரன் உண்டானான்" என்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுவதால் நான்கு ஜாதிகளும் ஈச்வரனாலேயே ஸிருஷ்டி செய்யப்



பட்டனவேயன்றி குணகர்மங்களால் உண்டாகக்கூடியவை யல்லவென்பது வெளியாகிறது.

## புருஷஸூக்தம் கல்பிதமன்று

இங்கு பூர்வபக்ஷிகள், "புருஷஸூக்தத்தில் ஜாதிபேதத்தைப் பற்றிச்சொல்லப்பட்டிருப்பது வாஸ்தவமாயினும், புருஷஸூக்தத்தை அநாதியான வேதபாகமென்று நம்பமுடியாதென்றும், அதன் நடையைக்கவனிக்குமளவில் அது பின்னிட்டு ரிஷிகளால் எழுதப்பட்டு வேதத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாமாகையால் அதை பிரமாணமாக நம்பமுடியா" தென்றும் வாதிக்கிறார்கள். இது மிகவும் விநோதமான துர்வாதமாகும். நமது பூர்வபக்ஷிகள் தங்களது கக்ஷிக்குப் பாதகங்களாகக் காணப்படுகின்ற வேதங்களையோ ஸ்மிருதிகளையோ அவைகள் புதிதாகையால் நாங்கள் நம்பவில்லையென்று அந்தியமாக ஸமாதானம் சொல்லி தள்ளப்பார்ப்பது வழக்கமாயிருக்கிறது. மிகவும் விஸ்தாரமான வேதபாகத்தில் புருஷஸூக்தம் ரிஷிகளால் எழுதப்பட்டு வேதத்தில் சேர்க்கப்பட்டதென்று இவர்கள் எந்தயோகதிருஷ்டியால் கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை. சரித்திரகாலத்திற்கு மெட்டாதகாலத்திலிருந்த "ஆபஸ்தம்பர்" போன்ற மஹரிஷிகள் புருஷஸூக்தத்தை வேதமாகவே மதித்து அதை உபயோகப்படுத்தவேண்டிய இடத்தையும் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார்கள். புருஷஸூக்தம் வேதத்தில் இல்லாமல் போனால் புருஷஸூக்தத்தை முக்கியமாக அபேக்ஷித்து நிற்கும், "பிரம்மமேதம் போன்ற பல கர்மங்கள் மந்திரக்குறைவினால் பூர்த்தியடையாமலேயே போகநேரிடும், ஆபஸ்தம்பாதிகளுக்குப் பிற்பட்ட பல ரிஷிகளும், ஸ்ரீ சங்கர, ராமானுஜாதி, மதாசாரியர்களும் புருஷஸூக்தத்தை வேதபாகமாகவே மதிக்கிறார்களென்பது அவர்களுடைய கிரந்தங்களிலிருந்து வெளியாகிறது. கீதையில் "चातुर्वर्ण्यं मया" என்கிற ச்லோக பாஷ்யத்தில் புருஷஸூக்தத்தை சுருதியென்றே ஸ்ரீ சங்கராசாரியார் வ்யவஹரித்திருப்பதைக் காணலாம். இதுபோல் சாந்தோக்யஉபநிஷத்திலும்

புருஷஸூக்தத்தை ரிக்வேதமென்று சொன்னதுடன் புருஷஸூக்தமந்திரமும் அனுவதிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தாலும் அது அநாதியென்பது ஸ்பஷ்டமாகும். இவ்வித பிரமாணங்கள் கர்ஜித்துக் கொண்டிருக்கையில் நமது பூர்வபக்ஷிகளுடைய வாதத்தை நாம் எப்படி நம்பமுடியும்? தவிர புருஷஸூக்தத்தை எந்த ரிஷி எக்காலத்தில் எக்காரணத்திற்காகச் செய்து வேதத்தில் புகவிட்டார் என்கிற கேள்விகளுக்கு ஸரியான பதில் கிடைக்கவில்லையாகையால் இவ்வாதம் துர்வாதமென்றே தள்ளத்தகும். ஆயினும் புருஷஸூக்தத்தைத் தவிர வேறு இடங்களிலும் வேதத்தில் ஜாதிபேதங்களின் ஸிருஷ்டியைப் பற்றிச் சொல்லியிருப்பதை விளக்கிக்காட்டமுடியும். யஜுர்வேதம் ஏழாவது காண்டத்தில் நான்கு ஜாதி முதலியவைகளின் ஸ்ருஷ்டி விஸ்தாரமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வாக்கியங்களின் அர்த்தங்களை இங்கு எடுத்துக் காட்டுகிறோம். பிரஜாபதியாகிற பிரம்மமானது தான் பிரஜைகளை ஸ்ருஷ்டி செய்ய ஆசைக்கொண்டு தனது முகத்திலிருந்து "த்ரிவ்ருத்" என்பதையும், தேவதைகளுக்குள் அக்னி தேவதையையும், சந்தஸ்ஸுகளுக்குள் காயத்ரீ சந்தஸ்ஸையும், ஸாமங்களுக்குள் "ரதந்தரம்" என்கிற ஸாமத்தையும், மநுஷ்யர்களுக்குள் பிராமணனையும், பசுக்களுக்குள் "அஜம்" என்கிற ஜாதி ஆட்டையும் ஸிருஷ்டி செய்தார். இச்சொல்லியவைகள் பிரம்மத்தின் முகத்திலிருந்து உண்டானவைகளாதலால் "முக்கிய" மென்று வ்யவஹரிக்கப்படுகின்றன. "ஸிருஷ்டி செய்யப்பட்டது" என்கிற அர்த்தத்தைக் கொடுக்கக் கூடியவைகளான பதங்கள் பிரயோகிக்கப் பட்டிருப்பதை கவனிக்கவேணும். இப்படி பிராம்மணன் முதலியவர்களின் ஸிருஷ்டியைச் சொல்லி விட்டு வேதம் மேலே சொல்லுகிறது.

பிரம்மமானது மார்பு, கை, இவைகளிலிருந்து "பஞ்சதசம்" என்கிற ஸ்தோமத்தையும், இந்திர தேவதையையும் 'த்ரிஷ்டுப்' என்கிற சந்தஸ்ஸையும், பிருஹத், ஸாமத்தையும், மனிதர்களுக்குள் "ராஜந்யன்" அதாவது க்ஷத்திரியனையும், பசுக்



களுக்குள் "அவி" என்கிற ஜாதியையும் ஸிருஷ்டி செய்தது. இதில் சொல்லப்பட்டவர்கள் எல்லாரும் பலமுள்ள பிரதேசத்திலிருந்து ஸிருஷ்டிசெய்யப்பட்டவர்களாகையால் உலகத்தில் இவர்கள் பலிஷ்டர்களாகவேயிருப்பார்கள். இதன் மேல் வைசியன் முதலியவர்களுடைய ஸிருஷ்டியும் விவரிக்கப்படுகிறது.

அதாவது மத்யபாகமாகிய தொடையிலிருந்து ஸப்ததசத்தையும், விச்வேதேவர்களையும் ஜகதீசந்தஸ்ஸையும், வைரூபமென்கிற ஸாமத்தையும் மநுஷ்யர்களுக்குள் வைச்யர்களையும் பசுக்களில் பசுமாடு, காளைமாடு இவைகளையும் ஸிருஷ்டி செய்தது. இதன் பிறகு சூத்திரர் முதலியவர்களுடைய ஸிருஷ்டியைப் பற்றிச் சொல்லுகிறது.

பிரம்மமானது தனது காலிலிருந்து ஏகவிம்சத்தையும், அனுஷ்டுப்சந்தஸ்ஸையும், வைராஜமென்கிற ஸாமத்தையும், மனிதர்களுக்குள் சூத்திரர்களையும், பசுக்களில் குதிரையையும் ஸிருஷ்டி செய்தது. இவ்வாறு யஜுர்வேதத்தில் ஸ்பஷ்டமாயும் விஸ்தாரமாயும் நான்கு ஜாதிகளுடைய ஸிருஷ்டி சொல்லப்பட்டிருப்பதால் ஜாதி ஜன்மஸித்தமென்றே நிச்சயிக்கலாகும். இதுபோல் ஐதரேயப் பிராம்மணத்திலும், "பிரஜாபதியென்கிற பிரம்மமானது யக்ஞத்தை ஸ்ருஷ்டி செய்தது. அதையொட்டி 'ஹோதார்" எனப்படுகிற க்ஷத்திரிய வைச்ய, சூத்திரர்களும் ஸிருஷ்டிக்கப்பட்டார்கள். இங்கும் "ஸிருஷ்டிக்கப்பட்ட" தென்கிற பதப்பிரயோகமிருப்பது கவனிக்கத்தக்கது. வாஜஸநேயகமெனப்படுகிற சுக்லயஜுர்வேதத்திலும் பிராம்மணஜாதிகள் ஸிருஷ்டிக்கப்பட்ட விவரம் ஸ்பஷ்டமாக காணப்படுகிறது அதாவது முதலில் பிராம்மணனே ஸிருஷ்டி செய்யப்பட்டான். அவன் ஒருவனாக இருந்துகொண்டு ராஜ்யபாரம் முதலிய பெரியகாரியங்களைச் செய்யசக்தியற்றிருந்தான். அதன்ஸஹாயார்த்தமாகப் பிறகு க்ஷத்திரியன் ஸிருஷ்டிக்கப்பட்டான். அவனாலும் உலகநிர்வாகம் செய்யமுடியவில்லை. பிறகு ஸஹாயத்தின்பொருட்டு வைசியனும், சூத்ரனும் ஸிருஷ்டிக்கப்பட்டார்கள், ஆகையால் லோகம் நடைபெறுவது

ற்கே இந்த நான்கு ஜாதிகளும் தனித்தனியான ஊழியங்களைச் செய்து ஸாதகமாயிருப்பதால் நான்கு விருத்தி அவசியமாயிற்றென்று வேதம் சொல்லி முடிக்கிறது.

இவ்வளவு தூரம் நாம் நிரூபித்த பிறகும் சரித்திரக்காரர்கள் வெளியிட்டிருக்கும் மிகவும் முக்கியமானதோர் ஆக்ஷேபத்தையும் இங்கு குறிப்பிட்டு அதற்கும் பதில் சொல்லவேண்டியது அவசியமாகிறது. அதாவது மந்திரம், பிராம்மணம், அர்த்தவாதம், என்று மூன்று வகையாய்ப் பிரிந்து நிற்கும் வேதத்தில் மந்திரபாகமே வெகு பிராசீனமென்று சொல்லக்கூடியது. மற்ற இரண்டு பாகங்களும் ரிஷிகளால் செய்யப்பட்டு பின்பு வேதத்தில் சேர்க்கப்பட்டிருக்கவேணும். ஆகையால் புதிதாகச்செய்யப்பட்ட வேதபாகங்களில் ஜாதிபேதத்தைப்பற்றி பிரஸ்தாவமிருப்பது ஸஹஜமாயினும், வெகு பிராசீனமாகிய மந்திரபாகங்களில் ஜாதி பேதங்களைக் காட்டக்கூடிய பதங்களே இல்லாதாகையால் ஜாதிபேதம் பின்பு ஏற்பட்டதென்றே சொல்லத்தகுமென்று சரித்திர நிபுணராகிய "ரமேசசந்திரதத்தர்" என்கிற இந்திய கனவான் தனது புத்தகத்தில் சொல்லுகிறார். இவர் நல்ல ஹிந்துகுலத்தில் பிறந்தவராயினும், ஹிந்துக்களுடைய பிரமாண கிரந்தங்களை மூலங்களாகக்கொண்டு விஷய ஆராய்ச்சி செய்யக் கடமைபெற்றவராயினும், அம்மாதிரி செய்யாமல், முற்றிலும் யூரோப்பியர்களுடைய சரித்ரங்களையே மூலமாகக்கொண்டு இம்மாதிரி எழுதிவிட்டபடியால் இது பிரயோஜனமற்ற கதையென்றே நாம் தள்ளிவிடவேணும்; வேதத்தில் ஒருபாகம் பிராசீனமென்றும், மற்றொன்று புதிதென்றும் கண்டுபிடிக்க இவர்களுக்கு யோகதிருஷ்டி கூட ஈச்வரனால் கொடுக்கப்பட்டிருக்கிறதுபோலும்! இல்லையேல் எப்படி இவர்கள் அம்மாதிரி கண்டுபிடித்தார்கள்; இவர்களுடைய வாதம் முழுவதும் தப்பென்று பிரமாண, யுக்தி முதலிய பல ஆதாரங்களுடன் வேறு இடத்தில் நாம் நிரூபித்துள்ளோம். அவைகளை இங்கு மீண்டும் பிரஸ்தாபிக்கப் போவதில்லை.



ஆயினும், இவர்களின் அபிப்பிராயத்திற்கு விருத்தமாக மந்திரபாகங்களிலும் பலவிடத்தில் ஜாதிபேதத்தைச்சொல்லக் கூடிய பதங்களிருப்பதை எடுத்துக்காட்டுவோம். யஜு: சாகையில் மந்திரத்தில் பிரம்ம,க்ஷத்ர,விச என்கிற மூன்று ஜாதிச் சொற்கள் காணப்படுகின்றன. இதுபோல்

. . ரிக்வேத மந்திரத்திலும் இதைப் பார்க்கலாம். அந்த மந்திரத்தில் சூத்ரபதமும் காணப்படுகிறது. இதுபோன்ற நூற்றுக்கணக்கான மந்திரங்களில் ஜாதிச் சொற்கள் இருப்பதைக் காட்டமுடியும். இப்படியெல்லாம், வெகு பிராசீனமென்று திருத்தக்காரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட மந்திரபாகங்களிலேயே பலவிடங்களில் ஜாதி பேதத்தைப்பற்றிய பதங்களிருப்பதையும், அவைகளின் அர்த்தத்தையும் கவனித்தால், ஜாதி பேதம் வெகு அநாதியென்றும், வேத காலத்திற்கும் முந்தியதென்றும் வெகு ஸ்பஷ்டமாக விளங்கும்.

ஸ்ரீ கும்பகோணம், ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள்
ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசக கவிரத்னம்
ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட
ஜாதி நிர்ணய கிரந்தத்தில் வேததாத்பர்ய
நிரூபணம் முடிவுபெற்றது.

---

குறிப்பு:—

இதுவரை எழுதியுள்ள விஷயங்களில் சிலபாகங்கள் கும்பகோணம் உ. ப. வே. கோபாலதேசிகாசாரியரவர்களாலியற்றப்பட்ட ஜாதித்வ நிரூபணம் என்னும் கிரந்தத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டுள்ளன.

अनादिरेषा जातिस्तु जन्मना सह जायते ।
नान्यथेति स्मृतीनां च मतमित्यद्य वर्ण्यते ॥

## "ஜாதி அநாதியென்றே ஸ்மிருதிகளின் கொள்கை."

பூர்வபக்ஷி: சென்ற மார்கழி-மீ வெளிவந்த 'சுதேசமித்திரன்' வருஷ அனுபந்தத்தின் 45-வது பக்கத்தில் M. R. ஜம்புநாதன் என்று கையொப்பமிட்டிருக்கும் ஒருவர், "ஹிந்துஸமூகத்தின் சீர்திருத்தம்" என்று தலையங்கமிட்டு, ஸ்வாமி தயாநந்த ஸரஸ்வதி பூர்விகமில்லை என்கிற விஷயத்தில் வர்ணநிச்சயம் என்கிற பாராவில் அடியில் வருமாறு கூறுகின்றார்.

மனிதனுடைய வர்ணம், குணம், கர்மம், ஸ்வபாவம் இவைகளினாலுண்டாகிறது என்றார். மநுதர்மசாஸ்திரத்தின் 8-வது அத்தியாயத்தின்மூலமாக நமக்கு என்னவெளியாகிறதென்றால் வைதிகமுனிகளாகிய வஸிஷ்டரும், மந்தபாலரும் மிகவும் நீசர்களாகவும், கேவலமானவர்களாகவும் நினைக்கப்பட்ட தஸ்யுஜாதியிலிருந்த பெண்களான அக்ஷமாலையையும், சாரங்கியையும் முறையே விவாஹம் செய்துகொண்டார்களென்றும், தங்களுடைய பதிகளுடைய சேர்க்கையால் அவர்களுக்கும் உயர்பதவி கிடைத்ததாகத் தெரிகின்றதென்றும், முற்காலத்தில் முனிகள் நீசஜாதி ஸ்திரீகளுடன் விவாஹம் செய்துகொண்டதாகப் புலப்படுகிறதென்றும், கலியுகவாரம்பத்திலும் வர்ணநிச்சயம் பிறப்பினாலல்லாமல், குணகர்ம ஸ்வபாவத்தினாலே செய்யப்பட்டதென்றும், யுதிஷ்டிரருடைய காலத்தில் பீமஸேனன் நரமாம்ஸ பக்ஷிணியாயும், இராக்ஷஸியாயுமிருந்த ஸ்திரீயை நேசித்து மணம்புரிந்துகொண்டானென்பது யாவருமறிந்தவிஷயமே யென்றும், ஆகவே வர்ணம் குணத்தினாலேற்படுகிறதென்றும் முடிவுசெய்திருக்கிறார். இதே இடத்தில் தீண்டாமையைப்பற்றியும் கொஞ்சம் எழுதியிருக்கிறார். அதையும் பின்பு கவனிப்போம்.



மநு எட்டாவது அத்தியாயத்தில் இவ்விதம் சொல்லியிருக்கிறாரென்பது தவறு, தற்காலம் பிரஸித்தமாய்விளங்கும் மனுஸ்மிருதியில் 8வது அத்தியாயத்தில் இல்லை. ஆனால் 9வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்விடத்திலும் இவர் அபிப்பிராயப்படுகிறபடி சாஸ்திர விதிப்படி விவாஹம் செய்துகொண்டதாகவில்லை. வஸிஷ்டருடனும், மந்தபாலருடனும் அக்ஷமாலையும் சாரங்கியும் ஸம்பந்தப்பட்டார்களென்று மனு கூறியிருக்கிறார்.

अक्षमालावसिष्ठेन संयुक्ताधमयोनिजा ।
शारङ्गी मन्दपालेन जगामाभ्यर्हणीयताम् ॥

இ—ள். தாழ்மையானஜாதியிலுதித்த அக்ஷமாலை என்பவள் வஸிஷ்டருடனும் (सङ्गता) சேர்ந்து கௌரவமாயிருக்குந்தன்மையையடைந்தாள். இவ்விதமே, சாரங்கியென்பவளும் மந்தபாலரென்கிற முனிவரையடைந்து பூஜ்யபாவத்தையடைந்தாள், என்று இதன் கருத்து ஏற்படுகின்றது. முனிவர்களான வஸிஷ்டரும், மந்தபாலரும் அந்த ஸ்திரீகளிடம் ஸம்பந்தப்பட்டபடியால் அவர்களுக்குப் பெருமை யேற்பட்டதென்று கூறியிருக்கிறார்? இதனால் வஸிஷ்டரும் அக்ஷமாலையை சாஸ்திர முறைப்படி மணம் புரிந்தாரென்று எங்ஙனம் கூறமுடியும்? அப்படி அவர் செய்திருப்பாராயின் அவரால் அனுஷ்டிக்கப்படும் வைதிக கர்மாக்களில் ஸ்திரீகளிருந்து நடத்தவேண்டிய சமயங்களில் அருந்ததி, லோபாமுத்திரை, இவர்களைக்கூறியிருப்பதுபோல் இவளையும் கூறியிருக்கலாமே? அப்படியிருப்பதாகத் தென்படவில்லையே? இங்கு மற்றொருவிஷயமும் நன்குகவனிக்கத்தக்கது, ஜாதியென்பது குணம்கர்மா, ஸ்வபாவம் இவைகளைக்கொண்டு ஏற்படுகிறதே தவிர பிறப்பாலில்லையென்று இவர்கொண்ட ஸித்தாந்தத்திற்கு இந்த மனுவசனத்தை ஆதாரமாகக்கொடுத்தது தவறு. அதில் மிகவும் நீசர்களாயும், கேவலமானவர்களாயும் நினைக்கப்பட்ட தஸ்யுஜாதியிலிருந்த பெண்களான அக்ஷமாலை

ஸையும், சாமர்த்தியையும் அவர்கள் மனம்புரிந்து அதனால் அவர்களுக்கு கௌரவ மேற்பட்டதென்றிருக்கிறது. இங்கு அக்ஷமாலையைக் கீழ்ப்பட்டஜாதி என்று கொள்வதற்குக் காரணம் **अधम** யோநிஜா என்கிற பதமிருப்பதே. இப்பதத்தின் பொருளைக் கவனிக்குங்கால் இவர்களது அபிப்பிராயத்திற்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறது. இப்பதத்தால் கீழ்ஜாதியிலிருக்கும் ஸ்திரீயினிடமிருந்து உண்டானவள் என்று பொருளேற்படுகிறது. அவரும் இக்கருத்தை யங்கீகரித்தே தீரவேண்டும். இதனால் அக்ஷமாலையென்பவள் தாழ்ந்தஜாதியிற்பிறந்தபடியால் தாழ்ந்த ஜாதி என்று அவளைக் கூறவேண்டுமென்று அபிப்பிராயமேதவிர இவரது அபிப்பிராயப்படி கர்மாவாலோ குணத்தாலோ அவளை இகழ்ச்சியாக மநுகருதவில்லை. பிறப்பால்தான் ஜாதிப்பிரிவு என்று கூறுவோர்களுக்கு முக்கிய ஆதாரமான இவ்வசனத்தை அதற்கு மாறுபாடான கருத்துக்கொண்டவர்கள் இதைத் தமக்கு சாதகமென்று எங்ஙனம் கருதினரோ? ஆயினும் பிறப்பால் ஜாதிபிரிவென்று கூறும்பக்ஷத்தில் கீழ்ஜாதியிற் பிறந்த அக்ஷமாலையை உயர்ந்த ஜாதியிலுள்ள வஸிஷ்டர் எப்படி ஸ்வீகரித்துக் கொண்டார் என்று ஓர் சங்கைதிகழலாம். இதுபோல் மற்றும் சிலகன்னிகள் பூர்வபக்ஷிகளாற் கூறப்பட்டுள்ளனர். அவைகளையெடுத்துக்காட்டி அங்கு இதற்கும் விடையளிப்பாம்.

நிற்க, கலியுகவாரம்பத்திலும் வர்ணநிச்சயம் பிறப்பாலல்லாமல் குணகர்மாக்களாலேயே ஏற்பட்டது என்றும் யுதிஷ்டிரரது சகோதரனான பீமன் நரமாம்ஸபக்ஷிணியான ராக்ஷஸியை விவாஹம் செய்துகொண்டானென்றும் கூறுகின்றனர்.

இதுவுஞ்சரியல்ல. க்ஷத்திரியர்களுக்குப் போகார்த்தமாய் எந்தஜாதிகளிலும் விவாஹம் செய்துகொள்ளலாம். ராக்ஷஸஜாதியென்பது தயை இல்லாமலும், பாபபுண்யங்களைக் கவனிக்காமலும் கொடூரமானகாரியங்களையும் செய்யுமேயன்றி, சண்டாளன் முதலானவர்கள்போல் ஜாதியிற்கீழ்ப்பட்டதென்று சொல்லமுடியாது. ஆகையாற்றான் ஸீதாவிவாஹகாலத்தில் ராவணனும் இச்சைப்பட்டுவந்ததாகச் சிலகவிகள் கூறுகின்றார்கள்.



மேலும், பீமஸேனன் தேவாம்சம்; அதாவது வாயுகுமாரன். அவன் சரித்திரங்களைக் கவனித்தால் அவனுடைய அரிய செய்கைகள் சாதாரண அரசர்களால்செய்ய இயலாதது என்று தெளிவாய்ப்புலப்படும். தற்காலத்திலும் அவனைத்தேவதையாக உபாஸிப்பாருண்டு. "**न देव चरितं चरेत्**" என்று ஸ்மிருதியில் கூறியுள்ளபடி தேவதைகளால் சாஸ்திரவிரோதமாய் ஒருசமயம் ஏதாகிலும் செய்யப்படினும் அதை ஸாமான்ய மனிதர் செய்யக்கூடாதென்று நிஷேதிக்கப்பட்டிருப்பதால் தேவாம்சமான அவன் நடத்தையை நாம் எடுத்துக்கொள்வது சரியல்ல. 'அவன் தேவதையல்ல மன்னர்களுக்குள் சிறந்தவன், சக்திவாய்ந்தமனுஷன்' என்றுதான் அங்கீகரிக்கலாமென்றாலும், அவன் நடத்தையை நாம் எடுக்கக்கூடாது. ஏனெனில்,

**धर्मव्यतिक्रमो दृष्टो महतां साहसं च तत् ।**
**तदन्वीक्ष्य प्रयुञ्जानस्सीदत्यवरोऽबलः ॥ मनु.**

என்றபடி மஹான்களிடத்தில் தர்மத்திற்கு விரோதமான நடத்தை காணப்படலாம். அது சாஸ்திர விரோதமாயிருப்பினும் இதற்குப்பரிஹாரம் செய்துவிடலாமென்கிற தைரியத்தினால் அது செய்யப்படுகிறது. உடனே அந்த தோஷத்திற்குப் பிராயச்சித்தமும் அவர்கள் செய்துவிடுவார்கள். அதைப்பார்த்து ஒருவிதமான தபஸுமில்லாத, துர்பலரான ஸாதாரண ஜனங்களும் அத்தகைய காரியத்தைச் செய்யத்துணிவாராயின் விசேஷ பாபத்திற்குள்ளாவார்கள் என்று மநு சொல்லியிருக்கிறார். இதனால் பீமஸேனன் செய்த விவாஹமானது சாஸ்திரவிரோதமாயிருந்தாலும் அதற்குரிய பரிகாரங்களையுஞ் செய்துகொள்ள வல்லசக்தியும் அவனிடமிருந்தது. நம்போன்றவர்கள் பாபகர்மாவை மாத்திரம் அவனைக்காட்டிலும் பதின்மடங்கு அதிகஞ்செய்வோமேயன்றி அற்பமேனும் பரிஹாரம் ஏற்படாது. ஆகையால் கலியுகவாரம்பத்தில் பிறப்பால் ஜாதிப்பிரிவில்லையென்று கூறுவது அறிஞர்களுக்கழகல்ல. அக்காலத்தில் பிறப்பால்தான் ஜாதிப்பிரிவிருந்தது என்பதைப் பாரதவசனங்களாலேயே பின் ஒரு சந்தர்ப்பத்தில் நிரூபிப்பாம்.

## பூர்வபக்ஷிகள்.

जन्मना जायते शूद्रस्संस्काराद्द्विज उच्यते ।
विद्यया याति विप्रत्वं ब्रह्मविद्ब्राह्मणो भवेत् ॥

இங்கு, மனிதன் பிறக்கும்பொழுது சூத்திரனாகவேயிருக்கிறானென்றும் ஸம்ஸ்காரங்களாலும் படிப்பாலும் பிரம்மக்ஞானத்தாலும் அவன் த்விஜனென்றும் விப்ரனென்றும் பிராம்மணனென்றும் சொல்லப்படுவானென்றும் ஸ்பஷ்டமாயிருப்பதால் ஜாதி குணத்தினாலேற்படுகிறதென்பதில் ஆக்ஷேபமில்லையென்று கூறுகிறார்கள்.

ஸமாதானம்— இந்தச்லோகத்திற்கு இவர்கள் கொள்ளும் பொருள் சரியல்ல. இங்கு "ஜந்மனாஜாயதே சூத்ர:" என்றுசொல்லியிருப்பதைக்கொண்டு எல்லாஜாதிகளும்பிறப்பால் சூத்திரர்கள் என்று கருத்துக்கொள்வது சரியல்ல. இவ்வசனமானது பிராமணர்களைப்பற்றி மாத்திரம் இருக்கவேண்டிய நிலைமையைக் கூறுகின்றது. ஒருமனிதன் பிராமணஜாதியில் பிறப்பேற்பட்டதால் மாத்திரம் சிறந்த பிராமணத்தன்மை அவனுக்குச் சித்தித்துவிட்டதென்றும் வேறுஸம்ஸ்காரங்கள் வேண்டியதில்லை என்று இருக்கக்கூடாதென்றும் சாஸ்திரங்களிற்கூறிய விதிப்படி ஸம்ஸ்காரங்களையடைந்தால்தான் சரியான பிராமண்யம் ஸித்திக்கும் என்றும் அறிவிக்கிறது. இக்கருத்தையே யாக்ஞவல்க்யஸ்மிருதியிலும்,

चित्रकर्म यथानेकैरङ्गैरुन्मील्यते पृथक् ।
ब्राह्मण्यमपि तद्वत्स्यात्संस्कारैर्विधिपूर्वकैः ॥

ஒருவன் சித்திரமெழுதினால் அந்தமூர்த்தி பூர்த்தியடைவதற்கு அந்தந்த இடங்களுக்குத்தக்கவாறு பலவர்ணங்களின் சம்பந்தம் ஆங்காங்கு ஏற்பட்டமாத்திரத்தில் எங்ஙனம் அந்தமூர்த்தி நன்கு பூர்த்தியடைந்து பிரகாசிக்கின்றதோ அங்ஙனமே பிராமணத்தன்மையும் சாஸ்திரங்



களாற் கூறப்பட்ட அவ்வக்காலங்களில் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்களுடன் சேர்ந்துதான் ஸித்திக்கும்

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதையனுஸரித்தே இவ்வசனமும் பிராமணனுக்குப் பிறந்தவுடன் பால்யாவஸ்தையிலிருக்கும் தன்மையையும் பிறகு அந்தந்தகாலத்தில் பெறவேண்டிய சிறந்தஸம்ஸ்காரங்களை விதிவழுவாது பெற்றால் அவைகளால் ஏற்படும் கௌரவமான பெயரையும் முறையே நிரூபிக்கின்றது. जन्मना जायते शूद्रः பிராம்மணன் அந்தஜாதியில் பிறந்த உடன் உபநயனமென்கிற முக்கியமான வைதிக ஸம்ஸ்காரம் பெறாத 3, 4 வயதுள்ள காலத்தில் சூத்திரனுக்கு ஒப்பாகிறானென்றும் அதாவது சூத்திரனுக்கு எப்படி ஆகாரம், ஆசாரம், அனுஷ்டானம் முதலிய நிர்ப்பந்தங்கள் அதிகமில்லாமல் குறைவாக ஏற்பட்டிருக்கின்றனவோ அவ்விதமே இவனுக்கும் அக்காலத்தில் அதிக நியமமில்லையென்று கருத்து. இதற்கிணங்கவே வஸிஷ்டஸ்மிருதியிலும் அநுபநீத தர்மத்தையுரைக்குமிடத்தில் वृथा शूद्रसमो ज्ञेयः நடத்தையால் சூத்திரனுக்கு ஒப்பானவன் என்று समः என்கிற பதத்தால் வெளியிட்டிருக்கிறார். மற்றும் இந்த அபிப்பிராயத்தைக்கொண்டுதான்,

जातमात्रशिशुस्तावद्यावदष्टसमा वयाः ।
सोऽपि गर्भसमो ज्ञेयो व्यक्तिमात्रप्रकाशितः ॥
भक्ष्याभक्ष्ये तथा पेये वाच्यावाच्ये तथानृते ।
अस्मिन्काले न दोषस्स्यात् स यावन्नोपनीयते ॥
उपनीते च दोषो हि क्रियमाणैर्विगर्हितैः ॥ दक्षः.

பிராமணஜாதியிற்பிறந்த ஒரு சிசுவிற்கு 8-வது வயது பூர்த்தியாகிறவரையில் அதாவது உபநயந ஸம்ஸ்காரமாகிறவரையில் அது வெளியிலிருந்தாலும் கர்ப்பத்திலிருப்பதாகவே கொள்ளவேண்டும். அக்காலத்தில் பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசினாலும் உண்ணக்கூடாத ஆகாரத்தை உட்கொண்டாலும் சரியான ஆசாரமில்லாவிட்டாலும் அந்த சிசுவிற்குத்தோஷ

யில்லை. உபநயன சம்ஸ்காரமேற்படுமானால் விதிவிசேஷத்திற்குப் பாத்தியப்படுகிறான் என்று தக்ஷஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கிறது. கௌதமரும் இவ்விதமே அபிப்பிராயப்படுகிறார். இந்த ஸ்மிருதிகளின் கருத்தைக்கொண்டு உபநயனத்திற்கு முன் பிராம்மண்யமுமில்லையென்று சொல்லக்கூடாதா வென்றால் அவர்கள் இதைப்பற்றி நிஷேதிக்காதபடியால் இல்லையென்று உரைக்கவியலாது. மேலும்,

ब्राह्मण्यां ब्राह्मणेनैव ह्युत्पन्नो ब्राह्मणः स्मृतः ।
सवर्णेभ्यस्सवर्णासु जायन्ते हि सजातयः ॥

பிராமணஜாதியிற்பிறந்த ஸ்திரீயினிடத்தில் பிராமண ஜாதியிற் பிறந்த புருஷனாலுண்டுபண்ணப்பட்டவன் பிராமணனாகிறான் என்று ஹாரீதர் யாக்ஞவல்கியர் முதலான மஹரிஷிகள் கூறியிருப்பதால் அதற்கும் விரோதமாகும். இங்குக்கூறப்பட்ட வசனங்களால் பிராமணஜாதியிற் பிறந்தவொருவனை உபநயன ஸம்ஸ்காரமாகிறதற்குமுன் சூத்திரன் என்று சொல்வதுதான் சரியானகருத்தென்று பூர்வபக்ஷிகள் கூறும்பொருள் தவறென்று தள்ளப்பட்டது. உபநயனாதி வைதிகஸம்ஸ்காரம் பெற்றபின் த்விஜனென்றும் பிர்மஸ்வரூபத்தைத் தியானிக்குங்கால் பிராமணனென்ற பெயரையடைகிறானென்றும் மற்றுமுள்ள பாகங்களுக்குப்பொருள், இவைகளாலுமிவர்களுக்கு ஸாதகமில்லை.

## 2. பூர்வபக்ஷிகளின் சங்கை.

तपो दमो दया दानं सत्यं धर्मःश्रुतं घृणा ।
विद्या विज्ञानमास्तिक्यमेतद्ब्राह्मणलक्षणम् ॥ शातातपः.

தவம், இந்திரியங்களையடக்குதல், தயை, ஈகை, சத்யம், தர்மம், வேதாத்தியயனம், லஜ்ஜை மற்றுமுள்ள சாஸ்திரக்ஞானம் முதலியவைகள் எவரிடம் காணப்படுகின்றனவோ அவர்கள்தான் பிராமணர்கள். பிறப்பாலில்லை என்று கூறுகிறார்கள்.



2. ஸமாதானம்—சாதாதபர் இவ்வசனத்தால் பிராமணர்களிருக்கவேண்டிய விதியைக் கூறுகின்றாரேயல்லது, பிராமண்யத்தைக் கூறவில்லை. இதில் ब्राह्मणलक्षणम् என்கிற பதத்தால் பிராமணனாகப்பிறந்த ஒருவன் இருக்கவேண்டிய முறை யெவ்விதமென்பதையறிவிக்கிறார். பிராமணஜாதியிற் பிறந்தவனுக்கு இந்த குணங்கள் அவசியமிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவன் வைதிககர்மாவிற்கு அருகனல்லவென்றும் ஏற்படுகிறதேயன்றி, இக் குணங்களிருக்கின்றவர்கள் யாவரும் பிராம்மணர்கள் என்று கருத்தல்ல. இவ்விதமே கீதையிலும்,

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परन्तप ।
कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणैः ॥ 18. 41.

என்கிற இந்தசுலோகத்தில், ஸ்வபாவப்பிரபவை: என்கிற பதத்தால் முன் ஜன்மாவின் புண்யவசத்தால் உத்தமகுணங்களுக்கிருப்பிடமான பிராமணஜன்மாவையடைந்திருப்பதால் அதையநுஸரித்துக் குணனுஸாரமாய்க் கர்மா பிரிக்கப்பட்டிருக்கின்றது என்றும், இதற்கடுத்துக் கூறப்பட்ட,

शमो दमस्तपःशौचं क्षान्तिरार्जवमेव च ।
ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्रह्मकर्म स्वभावजम् ॥

என்கிற இவ் வசனத்தில் स्वभावजम् என்கிற பதத்தால் பிராமண ஜாதியிற் பிறந்தவர்களுக்கு இத்தகைய குணங்கள் இயற்கையிலேயே இருக்குமென்றும் போதிக்கப் படுகின்றனவேயன்றி, இந்த குணங்களிருப்பவர்கள்தாம் பிராமணர்களென்று சொல்லப்படவில்லை. तपो दमः என்கிற சாதாதபஸ்மிருதியு மிவர்களுக்கனுகூலமில்லை என்பதும் வெளிப்படையே.

## 3. "பூர்வபக்ஷிகள்"

शूद्रयोनौ प्रजातस्य सद्गुणानुपतिष्ठतः ।
वैश्यत्वं लभ्यते ब्रह्मन् क्षत्रियत्वं तथैव च ।
आर्जवे वर्तमानस्य ब्राह्मण्यमपि जायते ॥

சூத்திரஜாதியிற் பிறந்தவனொருவன் சிறந்த குணமுடையவனாயிருப்பின், அவனுக்கு வைசியத்தன்மையும், க்ஷத்திரியத் தன்மையுமுண்டாகும். சரியான மார்க்கத்திலிருப்பவனுக்குப் பிராமணத்தன்மையுங் கிடைக்கும்' என்று இவ் வசனத்தின் பொருள் என்றும், இதனால் பிறப்பால் ஜாதியில்லையென்றும், குணகர்மாவால்தான் ஜாதி என்றும், நன்கு தெரிகிறபடியால் பிறப்பால் ஜாதி என்பது சரியல்லவென்றும் கருதுகிறார்கள்.

ஸமாதானம்:— சுருதிகளுக்கும் ஸ்மிருதிகளுக்கும் அர்த்தம் சொல்லுகிறதாயிருந்தால் அந்தப்பிரகரணம் முன்பின்னிருக்கும் இதர ஸ்மிருதிகளின் கருத்து இவையெல்லாவற்றையும் நன்கு உற்றுநோக்கியே கூறவேண்டும். அவ்விதமின்றி, அந்த வசனத்திற்கு மாத்திரம் தோன்றிய ஓர் அர்த்தத்தை வெளியிட்டால் அது மற்றுமுள்ளஸ்மிருதிகளுடன் விரோதிப்பதோடு விபரீத அர்த்தத்தையும் கொடுத்துவிடும். திருஷ்டாந்தமாய் आदन्तजन्मनस्सद्यः என்கிற ஆசௌசப்பிரகரணத்திலிருக்கும் இவ்வசனத்தை எடுத்துக்கொள்வோம். இவ் வசனத்தால் ஒருவனுக்கு தன் ஞாதியில் ஒரு குழந்தை பிறந்து அற்பகாலத்திற்குப் பிறகு அது மரித்துவிட்டால் இவனுக்கு ஆசௌசம் உண்டா? இல்லையா? உண்டானால் எவ்வளவு காலமென்றேற்படும் சந்தேகத்தை விலக்கவேண்டிப் பல் முளைக்காதவரையில் ஸ்நானத்தினால் அந்த ஆசௌசம் விலகிவிடுமென்று கூறப்படுகின்றது. சில சிசுக்களுக்குத் தோஷத்தால் ஒரு வயது வரையில் பல் முளைக்காமலிருப்பதுமுண்டு. அவ்விதம் பல்முளையாத ஓர் ஆண்டு நிறைந்த சிசுவின் மரணம் நேர்ந்தால் ஞாதிகளுக்குக் கீழ்க்கூறிய வசனத்தின்படி ஸ்நானமாத்திரந்தான் என்று ஏற்படலாம். அது தவறு. மற்றுமுள்ளஸ்மிருதிகளால் இத்தகைய இடங்களில் ஞாதிகளுக்கு ஆசௌசம் உண்டென்றும் கூறப்பட்டிருக்கிறபடியால் அவைகளுக்கு விரோதமின்றி அவைகளிற் கூறப்பட்டுள்ளதையனுஸரித்தே இறந்த சிசுவிற்கு ஆறுமாதகாலம்வரை பல் முளைத்திருந்தாலும், முளைக்காதிருந்தாலும் ஞாதிகளுக்கு ஸ்நானமாத்திரமென்றும், பிறகு பல் முளைக்காவிட்டாலும் ஆசௌசம் உண்டென்றும் கூறி, அதையனு



ஸரித்து ஆறுமாதகாலம் வரையில்தான் இவ்வசனத்திற்கும், தாத்பரியமென்று அறிஞர்களாற் கூறப்பட்டு அனுஷ்டானத்திலும் நடைபெற்று வருகின்றது.

பிரகிருதத்தில் சூத்திரஜாதியிற் பிறந்தவொருவன் நற்குணம் பொருந்தியவனாயின் அவன் வைசியன் முதலான தன்மையை அடைகிறானென்று கூறப்பட்டிருக்கிறது. இங்கு लभ्यते, जायते என்கிற இவ்விரு பதங்களாலும் அடைகிறானென்று மாத்திரம் போதிக்கப்படுகின்றது. அதையெப்பொழுது அடைகிறான்? உடனேயா? அல்லது 10வருஷங்கள் சென்றபின்பா? அல்லது மறுபிறவியிலா? பலபிறவிகளுக்குப்பிறகா? என்று கிளம்பும் சங்கைக்கு இங்கு ஒன்றும் கூறப்படவில்லை. மற்றுமுள்ள ஸ்மிருதிகளின் கருத்தைக்கொண்டு அதைத்தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. எங்ஙனம் முன் உவமையாகக்காட்டியவிடத்தில், அவ்வசனம் காலத்தைக்குறிப்பிட்டுச் சொல்லாததினால் இதரப் பிரமாணங்களைக்கொண்டு காலநிர்ணயம் செய்துகொண்டோமோ? அவ்வாறே இங்கும் காலநிர்ணயத்திற்கு வேறு ஸ்மிருதிகளின் அபிப்பிராயத்தை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. அப்படிக் கவனித்தால்,

शूद्रायां ब्राह्मणाज्जातः श्रेयसा चेत्प्रजायते ।
अश्रेयान् श्रेयसीं जातिं गच्छत्यासप्तमाद्युगात् ॥10. 64.

பிராமணனால் சூத்திரஸ்திரீயினிடத்தில் உண்டுபண்ணப்பட்ட ஸந்ததியானது, கிரமமாய் ஏழு ஜன்ம நல்ல நடத்தையாய் வந்தால் பிறகு பிராமணஜாதியை யடையலாம்.

என்று மனுவும்,

धर्मचर्यया जघन्यो वर्णः पूर्वं पूर्वं वर्णमापद्यते जन्मपरिवृत्तौ ॥
आप. 25. 11. 10,

இந்த சூத்திரத்தால் கீழ்ஜாதியிலிருந்தொருவன் சிறந்த தனக்குரிய தர்மத்தை [illegible] அனுஷ்டி[illegible]வர்தால் இந்த

ஜந்மா முடிந்தபிறகு மறுஜன்மத்தில் மேலான அடுத்தஜாதியை அடைகிறான் என்று ஆபஸ்தம்பரும், கீதை, பாரதம், ராமாயணம் முதலான பலவிடங்களிலும் எவ்விதநன்னடக்கை இருந்தாலும் அடுத்த ஜன்மத்திலோ, அல்லது மறுஜன்மத்திலோ, தான் மறுபடியும் மேல்ஜாதியில் ஜனிப்பானென்றும், அதே ஜன்மாவில் ஜாதி மாறாதென்றும் ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விதப் பிரமாணங்களைக்கொண்டு கீழ்க்கூறியவசனத்திற்கு இந்த ஜன்மத்தில் கீழ்ஜாதியில் ஜனித்த ஒருவன் நற்குணம், நற்கர்மா இவையுடனிருந்தால் அடுத்த மறுபிறப்பில் அடுத்த உயர்ந்தஜாதியில் ஜனிப்பான் என்றுதான் பொருளேற்படுகின்றதேயன்றி, இவர்கள் கூறியவண்ணம் அந்த ஜன்மாவிலேயே மேலானஜாதியை அடையமுடியாது என்பது திண்ணம்.

4. பூர்வபக்ஷிகள்:—

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः । गी ॥

'பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரனென்கிற நான்கு வர்ணங்களும் அவரவர்களுடைய குணத்தையும் கர்மாவையுமனுசரித்து என்னால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன' என்று ஸ்ரீ பகவானே சொல்லியிருக்கிறார். இதனால் சமதமபிரமஞானமுடையவனைப் பிராமணனென்றும், பாகுபலமுடையவனை க்ஷத்திரியனென்றும், கிருஷி, வியாபாரம் முதலியதொழிலில் பற்றுதலுள்ளவனை வைசியனென்றும், வேலைசெய்து ஜீவிப்பவனைச் சூத்திரனென்றும் அவரவர்களின் குணகர்மாவையனுசரித்து ஜாதிப்பிரிவு ஏற்பட்டிருப்பதால் பிறப்பால் ஜாதியேற்பட்டதென்று சொல்வது பொருந்தாது என்று அபிப்பிராயப்படுகின்றார்கள்.

4. ஸமாதானம்:— மூவுலகங்களையும் படைத்து ஆளக்கூடிய சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமென்னும் கர்மாக்களுக்கு இருப்பிடமாய் விளங்கும் ஸர்வக்ஞனை பகவான் எல்லா ஜனங்களையும் உத்தமஜாதியில் சிருஷ்டித்து, சுகமாய் வாழ்ந்துகொண்டி-



ருக்கும்படி செய்யாமல், காமக்குரோதம் முதலிய கெட்ட குணங்களுக்கிடுபட்ட ஸாமான்ய ஜனங்களைப்போல் பக்ஷபாதமாய்ச் சிலரைப் பிராமணஜாதியென்ற மேலான ஜாதியிலும், சிலரை அடுத்தபடியான க்ஷத்திரியன் முதலான ஜாதிகளிலும் ஏன் சிருஷ்டிக்கவேண்டும்? என்று விவேகமில்லாத சில ஜனங்களுக்குத் தோன்றும் சங்கையை விலக்கவேண்டிக் கருணாநிதியான கண்ணபிரான் அடியில் வருமாறு வெளியிடுகின்றார்.

“நான் உலகிலுள்ளஜனங்களைப்போல் பக்ஷபாதமாய் ஒருகாரியமும் செய்பவனில்லை. எனக்கு வேண்டியவர்களென்றும், வேண்டாதவர்களென்றும் கிடையாது. இவ்விதமேற்பட்ட சிருஷ்டியின் வித்தியாசத்திற்கு நான் காரணனுமில்லை. சகலப்பிராணிகளுக்கும் அவரவர்களால் முன்ஜன்மாக்களிற் செய்யப்பட்ட கர்மாக்களையும், குணங்களையுமனுசரித்து ஏற்படுகின்றது. நற்குணங்களோடு நல்லகர்மாவைச் செய்தாராயின் சிறந்த பிராமணகுலத்தில் ஜன்மா ஏற்படும். இல்லாவிட்டால் முறையே கீழ்ப்பட்டஜாதியில் ஜன்மாவை யடைவார்களென்பதை யறிவிக்கவேண்டி गुणकर्मविभागशः என்றுகூறியிருக்கிறார். குணம் கர்மா இவைகளின் வேறுபாட்டால் ஜாதிப்பிரிவு ஏற்படுகின்றது. இதனால் இப்பொழுது தாழ்ந்தஜாதியிலிருக்கும் ஒருவன் சிறந்த குணம் கர்மா இவைகளையடைந்தால் அவனை மேல்ஜாதியாக ஏன் நாம் செய்துகொள்ளக்கூடாதென்று நினைப்பது சரியல்லவென்பதை யறிவிக்கவேண்டி मया என்று கூறியிருக்கிறார். அவ்விதமிருப்பவன் “என்னால் மேல்ஜாதியில் சேர்க்கப்படவேண்டுமேயன்றி, மற்றவர்களுக்கு அதிகாரமில்லை” யென்று வெளியிட்டிருக்கிறார். நீர்தான் உத்தமகுணமுடைய ஒருவனை இந்த ஜன்மாவிலேயே உயர்ந்தஜாதியில் சேர்க்கலாமோ வென்றால், அதுவும் இப்பொழுது முடியாதென்று காண்பிக்கிறார் सृष्टम् என்கிற பதத்தால். வியாகரணசாஸ்திரப்படி இப்பதமானது சிருஷ்டி எனப் பொருள்கொண்ட सृज என்கிற தாதுவுடன் இறந்தகாலத்தைக் குறிக்கும் க்த என்கிற பிரத்யயம் சேர்ந்து सृष्टम् என்றாயிருக்கிறது. இதற்குமுன் ஜகத்தையுண்டு

பண்ணுங்காலத்திலேயே குணங்களுக்குத்தக்கவாறு முறையே அந்தந்த ஜாதிகளின் சிருஷ்டி செய்தாய்விட்டனர். இனியும் அதற்குரிய சமயத்தில்தான் தன்னாலேயும் செய்யமுடியுமென்றும் இப்பதத்தால் அறிவிக்கிறார். இவைகளால் நமக்கு என்ன ஏற்படுகிறதென்றால், பாபபுண்ய கர்மங்கள், குணங்கள் இவற்றையனுஸரித்தே ஜாதிப்பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றனவென்றும்; அவையும் சகல உலகங்களையும் படைத்தாரும் பகவானாலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றும், அவரும் ஒருவனுக்கு ஒருஜாதியில் ஜன்மாவைக் கொடுத்துவிட்டால் அவன் எவ்வளவு சிறந்த கர்மங்களைச் செய்தாலும், அதே ஜன்மத்திலில்லாமல் மறுபிறப்பில் அவனுக்குரிய மேலானஜாதியையளிக்க சக்தி வாய்ந்தவனென்றும் நன்கு வெளியாகின்றது. இந்த அபிப்பிராயத்தையே, அறிவிற் சிறந்தவர்களென்றும், ஈசாவதாரமென்றும், லோகாசார்யாளென்றும் பல பண்டிதர்களால் போற்றப்பட்ட ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாள், ராமானுஜாசார்யாள் முதலான மஹான்களும் தங்களால் இயற்றப்பட்ட பாஷ்யங்களில் ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார்கள். இதனுண்மை இவ்விதமிருக்க, பிறப்பால் ஜாதியில்லை என்று ஒன்றையும் கவனிக்காமல், தைரியமாய்ப் பலவிடங்களிலும் பறையறையும் தற்காலத்திய சிலர் பகவான் கீதையில் கூறியிருக்கிறார் என்று ஜனங்களை வஞ்சித்துவருகிறார்கள். அந்தோ! இதுவும் கலியின் ஓர் விந்தையோ!!

இதிஹாஸம், புராணம் முதலியவைகளைக் கவனித்தாலும் குணகர்மாக்களால்தான் ஜாதிப்பிரிவென்று வெளியாகிறதென்று பூர்வபக்ஷிகளால் தங்களுக்கு ஆதாரமாய்க்கூறும் வசனங்களையும் முறையே எடுத்துக்காட்டி, அவ்வசனங்களின் உண்மையான அர்த்தங்களையறிவித்து இவர்கள் கொள்ளும் அபிப்பிராயம் சரியல்லவென்பதையும் நிரூபிக்கிறோம்.

5. பூர்வபக்ஷிகளினபிப்பிராயம்.—

வஸிஷ்டர், வியாஸர், விசுவாமித்திரர், சுகர், ரிச்யசிருங்கர், நாரதர் முதலிய மகரிஷிகளைத் திரிகாலஞானிகளென்றும், தே



வாம்சமுடையவர்களென்றும், பிராம்மணோத்தமர்களென்றும், உங்களால் கொண்டாடப்படுவதற்கு யாதுகாரணமென்பதைக் கவனித்தால், சிறந்த குணங்களையும், உத்தமமான தபஸ்ஸையுந்தவிர ஜன்மாவினால் என்று சொல்லமுடியாது. ஏனென்றால்,

जातो व्यासस्तु कैवर्त्याश्श्वपाक्यास्तु पराशरः ।
शुक्याश्शुकस्तथोलूक्याः कणादाख्यस्सुतो भवत् ॥
ऋश्यशृङ्गस्त्वभून्मृग्याः वसिष्ठो गणिकात्मजः ।
माण्डूक्यो मुनिराजस्तु मण्डूकीगर्भसंभवः ॥

இங்குகூறப்பட்ட வசனங்களைக் கவனித்தால், வியாஸர், வஸிஷ்டர், பராசரர் முதலிய முனிகள் கீழான ஜாதியினின்று உண்டானவர்களாகத் தெரிகின்றதேயல்லாமல், மேல்ஜாதியிலிருந்து என்று சொல்வதற்கிடமில்லை. இவர்களைச் சிறந்த பிராமணோத்தமர்களென்று கொண்டாடுகிறார்கள். ஆகையால் குணகர்மாக்களால்தான் ஜாதிப்பிரிவென்று அவசியம் அங்கீகரிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

5. ஸமாதானம்:—வியாஸர்முதலிய மஹரிஷிகளின் சரித்திரங்களைத் திருஷ்டாந்தமாகக்கொண்டு அவ்விதம் நாமும் ஏன் செய்யக்கூடாதென்று நினைப்பது சரியல்ல. அவர்கள் ஒருசமயம் சாஸ்திரவிரோதமான தவறான ஓர் காரியத்தைச் செய்தாலும் அந்த தோஷத்திற்குச் சரியான பரிஹாரஞ்செய்யக்கூடிய யோக்கியதை அவர்களுக்கு இருக்கிறபடியால் அது அவர்களுக்குத் தோஷமாகாது. மேலும் விசுவாமித்திரர் என்ற ஓர் மஹரிஷி ஒருசமயம் விஷயசுகத்தில் விருப்பமுள்ளவர்போல் மேனகையினிடம் அதையநுபவித்தாலும், உடனே தம்மால் செய்யப்பட்ட கடோரமான தவத்தால் உலகங்களுக்கே சிருஷ்டிகர்த்தாவாகிய சதுர்முகனைத் தமக்கு முன்வரும்படி செய்து தம்மிஷ்டத்தைப்பூர்த்திசெய்துகொண்டதாகப் புராணங்களில் நன்கு வெளியிடப்பட்டிருக்கின்றது. விசுவாமித்திரர் தேவஸ்திரீயினிடத்தில் காமுகராயிருந்து விஷயசுகங்களையநுபவிக்க

வில்லையா? நாமும்ஏன் அநுபவிக்கக்கூடாதாவென்று கேட்ட காரியத்தைச் செய்யமாத்திரம் அதிக சக்தி நமக்கு உண்டே யல்லாது, அதற்குப்பிராயச்சித்தமாய் அவரால் செய்யப்பட்ட தவத்தை நம்போன்றவர்களால் அற்பங்கூடச் செய்யவியலாது. ஆகையால் நாம் அதை யெடுத்துக்கொள்ளக்கூடாது. மேலும், முன் யுகங்களில் ஒரு பிராணி உண்டாகவேண்டுமானால் பீஜம், க்ஷேத்திரம் இரண்டும் சிரேஷ்டமாயிருக்கவேண்டுமென்றநியமமில்லை. க்ஷேத்திரம் இழிப்பட்டதாயிருந்தாலும் பீஜம் சிறந்ததாயிருந்தால் அதையநுஸரித்து உண்டாகும் ஸந்ததியும் சிறந்ததாகவே உண்டாகும். இந்த அபிப்பிராயத்தையே,

यस्माद्बीजप्रभावेण तिर्यग्जा ऋषयोऽभवन् ।
पूजिताश्च प्रशस्ताश्च तस्माद्बीजं प्रशस्यते ॥ 8.10-72,

முற்காலத்தில் சில ரிஷிகள் பறவைமுதலான இழிந்த ஜாதி க்ஷேத்திரத்தில் ஜன்மமடைந்தாலும் பீஜத்தின் மகிமையால் மிகவும் பிரஸித்திபெற்றவர்களாயும், எல்லா ஜனங்களாலும் பூஜிக்கப்பட்டவர்களாயுமிருந்திருப்பதால், அக்காலத்தில் பீஜத்தையநுஸரித்தே ஜாதிநிர்ணயமேற்படலாமென்று மனுவும் கூறியுள்ளார். இங்குக் கூறப்பட்ட மநுவசனத்தின்படி வியாஸர், பராசரர் முதலானவர்களுடைய உற்பத்திக்கு க்ஷேத்திரம் இழிப்பட்டதாயிருந்தாலும், பீஜம் மஹான்களான மஹரிஷிகளுடையதாகையால் பீஜபலத்தைக்கொண்டு அவர்களைப் பிராமணர்களென்றும் மஹான்களென்றும் சொல்வது உசிதமே. இங்ஙனமே,

तपोबीजप्रभावैस्तु ते गच्छन्ति युगे युगे ॥ उत्कर्षं 8-10-42,

கிருதயுகம், திரேதாயுகம் இவ்விரண்டிலும் க்ஷேத்திரம் தாழ்ந்ததாயிருப்பினும், தபோவிசேஷத்தாலும், பீஜப்பிரபாவத்தாலும் சிலர் சிறந்தவர்களாகிறார்கள் என்று மநு 10-வது அத்தியாயத்



தில் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். இவ்விஷயத்தில் இன்னும் பல அரிய பிரமாணவசனங்களிருப்பினும் விரிவிற்கஞ்சி விடுத்தனம்.

மற்றும் ஸூக்ஷ்மமான மற்றொருவிஷயம் இங்கு கவனிக்க வேண்டியதவசியம். அஃதாவது முன்னோர்களான நம் மஹரிஷிகள் இக்காலத்திய ஜனங்களைப்போல் கேவலம் விஷயத்தில் விருப்பமுள்ளவர்களாய்க்கொண்டு போகத்தையே பெரியபுருஷார்த்தமாகக் கருதித் தாழ்ந்த ஜாதிகளிடம் போகத்திற்கு ஆசைப்படவில்லை. அதன் உண்மை இஃதேயாகும். முற்காலத்திய மஹரிஷிகளெல்லாம், மகான்களாயும் லோகோபகாரத்தையே பெரிதாய்க்கருதிய கருணாநிதிகளாயுமிருந்தவர்களாகையால் ஒருசமயம் "இது நல்லமுகூர்த்தம் இந்தமுகூர்த்தத்தில் நம் பீஜத்தால் ஸந்ததியேற்பட்டால் அதனால் லோகத்திற்கு உபகாரமேற்படும்" என்று நினைத்து அச்சமயத்தில் தன் பீஜத்தை உபயோகப்படுத்தக்கூடிய க்ஷேத்திரம் கௌணமாயிருந்தாலும் பிறகு ஏற்படும் லோகோபகாரத்தையே பெரிதாய்க் கருதி உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அவர் கருதும் அந்தச் சிறந்த முகூர்த்தத்தில் தாழ்ந்த ஜாதியிலுண்டான க்ஷேத்திரம் கூடக் கிட்டாவிட்டால் பூமியிலாகிலும் ஜலத்திலாகிலும் அந்த பீஜத்தை விட்டுவிடுவார்கள். அதை எந்தப்பிராணிகள் புஜிக்கின்றனவோ அவை கர்ப்பந்தரித்து அவைகளினின்றும் உண்டாகும்படி நேருகின்றது. அந்தபீஜத்தை, கிளி, தவளை, கோட்டான் மான் முதலிய பல பிராணிகளும் புஜிக்கும்படி நேருமாகையால் அதையநுஸரித்து சுகனென்றும், மாண்டூக்கியனென்றும் கடூ என்றும் காரணப்பெயர் சில ரிஷிகளுக்கும், ரூடியானபெயர் சில ரிஷிகளுக்கும் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விதம் அங்கீகரிப்பதுதான் உசிதம். இல்லாவிடில் விஷயசுகத்தில் மிக்க அவாவுள்ள மனிதனும் மனுஷ்யஜாதிஸ்திரீயை விட்டு வேறுஜாதி ஸ்திரீயினிடத்தில் பிரவேசித்ததாகக் கதைமூலமா

யாவது கேழ்விப் பட்டிருக்கிறோமா? அவ்விடம் பிரவேசித்தாலும் கிளியினிடமும், கோட்டானிடமும், தவளையிடமும், பிரவேசிக்க எப்படி சாத்தியம் என்பதையும், கொஞ்சம் கவனித்தால் மேலே கூறியவாறே சொல்லவேண்டுமேயல்லாது வேறு விதமாய்ச் சம்பவிக்க இடமில்லையென்று தெளிவாய்ப் புலப்படுகின்றது. அவர்களின் அபிப்பிராயப்படி அம்மாதிரி ஜனித்த வஸிஷ்டர், வியாஸர், மாண்டூக்கியர் கௌதமர் முதலான மஹான்களும் லோகோபகாரமான பல காரியங்களைச் செய்திருக்கிறார்களென்பதும் வெளிப்படை. இக்காலத்திலிருக்கும் ஜனங்கள் அம்மாதிரி எண்ணமுடையோர்களுமல்ல. ஒருசமயம் அவ்விதம் இவர்கள் கருதினாலும் சரியான தவமில்லாதபடியால் அது நிறைவேறாது. மேலும் முன்யுகங்களில் மாத்திரம் பீஜத்தையனுசரித்து ஜாதிவியவஸ்தை சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி இக்காலத்திற்குச் சொல்லப்படவில்லை. இதையனுசரித்தே,

सत्यस्य विप्लवो यावत्तावद्बीजं प्रशस्यते ।

உலகில் எவ்வளவு காலம்வரையில் ஸத்தியம் மாறாமல் நிலைபெற்றிருக்கின்றதோ அக்காலம் வரையிற்றான் பீஜத்தைக் கொண்டு ஜாதிவியவஸ்தை,

என்று ஓர் ரிஷி கூறுகின்றார். ஆகையால் இக்காலத்தில் பீஜம் க்ஷேத்திரம் இவையிரண்டும் சிறந்ததாயிருந்தாற்றான் சிறந்த ஜாதியென்பதும் இல்லாவிடில் இல்லையென்பதும் நிச்சயம். இதுவரை எம்மால் நிரூபிக்கப்பட்ட ஸமாதானங்களைக்கொண்டே துவக்கத்தில் சுதேசமித்திரனில் எழுதிய எம். ஆர். ஜம்புநாதய்யர் வினாவிற்கு விடையளிப்பதாகக் கூறியதற்கும் ஸமாதானம் சொல்லியாய்விட்டது. இதுவரையில் பூர்வபக்ஷிகளின் அபிப்பிராயத்தையங்கீகரித்து அதற்கு சாஸ்திரீயமான விடையளித்தோம்.



நிற்க, மனுஷ்யர் அனுஷ்டிக்கவேண்டிய தர்மத்தில் தேவதைகளுடையவும், ரிஷிகளுடையவும் மாறுதலான சில அனுஷ்டானங்களைப் பிரமாணமாகக் கொள்ளக்கூடாது. சாஸ்திரங்களுக்கு விரோதமில்லாத சரியான அனுஷ்டானங்களையே பின்பற்றவேண்டும்.

தைத்திரீய உபநிஷத்தில் "எங்களால் உபதேசிக்கப்படும் தர்மங்களில் எவை சிறந்தனவோ, அவைகளை நீங்கள் கிரகித்துக்கொள்ளுங்கள், மற்ற பாகங்களை விட்டுவிடுங்கள்" என்று சுருதி கூறுகின்றது.

धर्मव्यतिक्रमो दृष्टो महतां साहसं तथा ।
तदन्वीक्ष्य प्रयुंजानः संसीदत्यपरोऽबलः ॥ मनुः

"மஹான்கள் ஸாஹஸத்தால் தர்மநெறியைமாறி நடந்ததாகக் காணப்பட்டாலும், அதைப்பார்த்து சக்தியற்ற மற்றோரும் அவ்வழி சென்றால் மிகவும் கஷ்டமடைவார்கள்" என்று மனு கூறுகின்றார்.

तेजोमयानि पूर्वेषां शरीराणीन्द्रियाणि च ॥
दोषैस्ते नोपलिप्यन्ते पद्मपत्रमिवांभसा ॥

"நம் முன்னோர்களுடைய சரீரங்களும், இந்திரியங்களும், தேஜோரூபங்களாகையால், தாமரையிலையானது ஜலத்தோடுபற்றுதலையடையாததுபோல் இவர்களும் தோஷங்களோடுசம்பந்தப்படமாட்டார்கள்" என்று ஆபஸ்தம்பர் சொல்லுகிறார்.

अनुष्ठितं च यद्देवैर्मुनिभिर्यदनुष्ठितम् ।
नानुष्ठेयं मनुष्यैस्तदुक्तं कर्म समाचरेत् ॥ बोधा

"தேவர்களால் அனுஷ்டிக்கப்பட்டிருக்கும் கர்மாவையும், முனிவர்களாலனுஷ்டிக்கப்பட்ட கர்மாவையும், மனிதர்கள் அனுஷ்டிக்கக்கூடாது. இவர்களையுத்தேசித்து எந்தெந்த கர்மாவை அனுஷ்டிக்கும்படி சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றனவோ அவைகளைமாத்திரம் அனுஷ்டிக்கவேண்டும்", என்று போதாயனர் அறிவிக்கிறார்.

இங்கு கூறப்பட்ட வசனங்களால், தேவர்களும் முனிவர்களும் தேஜோரூபமான சரீரமுடையவர்களாகையால், அவர்கள் எத்தகைய கர்மாவைச் செய்தாலும் அற்பமேனும் தோஷம் அவர்களிடம் அணுகாது. ஒருஸமயம் அந்த தோஷம் அவர்களிடம் ஸம்பந்தப்பட்டாலும், உடனே அதை விலக்கக்கூடிய சிறந்த பிராயச்சித்தத்தை அவர்கள் செய்துவிடுவார்கள். ஒருவிதமான சக்தியுமில்லாத இக்காலத்திய ஸாமான்ய ஜனங்கள் அவ்வாறு சாஸ்திரவிரோதமாய் நடத்தப்பட்டிருக்கும் கர்மாவை திருஷ்டாந்தமாகக்கொண்டு தாங்களும் அவ்விதம் நடத்தக்கூடாது. முனிவர்களால் நடத்தப்பட்டிருந்தாலும் சாஸ்திர விரோதமாயிருப்பின், அதை நாம் கவனிக்கக்கூடாது என்று சுருதியிலும்,

नो इतराणि ।

என்று ஸ்பஷ்டமாய்க் கூறியிருக்கின்றது. ஆகையால் மஹரிஷிகளுடையவோ, தேவதைகளுடையவோ, விதிக்கு மாறாதலாயிருக்கும் நடத்தையையோ, ஜன்மாவையோ, எடுத்துக்காட்டி அவ்விதம் நாமும் ஏன் செய்யக்கூடாதென்கிற இந்தக் கேள்வியும் தவறென்று தள்ளப்பட்டது.

6. பூர்வபக்ஷிகளின் ஆசங்கை :—

உலகில் எங்கும் பரவியிருந்த அதர்மத்தைக் கண்டித்து தர்மஸ்தாபனம் செய்யவேண்டுமென்று அவதரித்த கருணாமூர்த்திகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளவர்கள் வாராணஸியிலிருக்குங்கால், ஒருசமயம் கங்கையில் நீராடித் திரும்பிவரும்போது தம் அருகில்வந்த புலையனைநோக்கி விலகு, விலகு என்று கூறவே, அப் புலையன் "உமது அன்னமயகோசமும் என்னுடைய அன்னமயகோசமும் ஒன்றுதானே. உம்மிடத்திலிருக்கும் சைதன்யத்திற்கும், என்னிடமிருக்கும் சைதன்யத்திற்கும் யாதொரு பேதமுமில்லையே! ஹே! யதிச்ரேஷ்டரே! எதைப்பார்த்து விலகு, விலகு என்று சொல்லுகிறீர்கள்" என்ற கருத்தைக்கொண்ட,



अन्नमयादन्नमयमथवा चैतन्यमेव चैतन्यात्

यतिवर दूरीकर्तुं किं ब्रूषे गच्छ गच्छेति ॥

என்ற இந்த ச்லோகத்தினால் கேட்கும்போது, ஜகத்குருவானவர் அவனிடம் ஞானமிருப்பதால், அவன் சண்டாளனாயிருந்தாலும் ஞானவலிமையால் தமக்கு குருவென்கிற கருத்துக் கொண்டுள்ள

चण्डालोऽस्तु सतु द्विजोऽस्तु गुरुरित्येषा मनीषा मम ।

என்கிற இவ்வசனத்தால் நிரூபித்திருக்கிறார்கள். இதனாலும், உத்தமமான, ஞானம், கர்மா இவைகளிருப்பின் அவனை மேலான ஜாதி என்றே கூறவேண்டுமென்று ஏற்படுகின்றது.

6. ஸமாதானம்:—

ஸ்ரீ ஜகத்குருவான பரமாசார்யாள் ஸாக்ஷாத் பரமேச்வர அவதாரமென்றும், நிக்ரஹாநுக்ரஹ சக்திவாய்ந்தவரென்றும், பலவிடங்களில் சொல்லப்பட்டிருப்பதை எல்லோரும் அறிந்திருக்கலாம். மேலும், அவர்களுடைய உட்கருத்து அத்வைதத்தைப் பெரிதாகக்கொண்டதென்றும், அம் மதத்தை ஸ்தாபனம்செய்யும்பொருட்டே இவ்விதம் அவதரித்தார்களென்பதும், ப்ரஸித்தமே. இவரைப் பரீக்ஷிக்கவேண்டி ஸ்ரீ விச்வநாதரே புலையவேடம் பூண்டு வந்தாரென்பதும் வெளிப்படையே. अन्नमयादन्नमयम् என்று புலயரூபியான விச்வநாதரால் கேவலம் அத்வைதநிலையிலிருந்து கூறப்பட்ட இவ்வசனத்தைச் செவியுற்ற லோககுரு அவர்கள் மஹான்களாகையால் அங்கு வந்திருப்பவர் அக் காசிமாநகரில் விளங்கும் விச்வநாதரென்றும், தம்மைப் பரீக்ஷிப்பதற்காக நீசவேஷத்தோடு வந்திருக்கிறாரென்றும் உண்மையை அறிந்துகொண்டார்கள். உலக வாழ்க்கையில் வெறுப்புற்று, காமக்ரோதாதிகளை ஜயித்து திடமான வைராக்கியம் பெற்று, சகலமும் பிரம்மஸ்வரூபமென்கிற நிச்சயமனபாவனையும் சித்தத்தில் இருத்தி, கேவலம் ஞானஸ்வரூபியாயும், அலையில்லா ஆனந்தக்கடலாயும் விளங்கும்

பரம்பொருளாகிய ஆத்மஸ்வரூபத்தோடு ஐக்யத்தை எவன் பெற்றிருக்கின்றானோ, அவன் சண்டாளனாயிருப்பினும் குருவென்றே எனது அபிப்பிராயம் என்று கூறியிருக்கிறார். இதனால் பரமஹம்ஸரென்கின்ற ஆச்ரமத்தையடைந்திருக்கும் இவர் எந்தநிலையிலிருக்கிறாரென்று அறியவேண்டி இவ்விதம் கேட்டாரென்று உண்மையறிந்து, தம்முள்ளத்திலிருக்கும் கருத்தை இவ்விதம் தெரிவித்திருக்கிறார். இங்கொரு விசேஷமுண்டு. நம் ஆசார்யாள் मनीषा, मम என்கிற இரண்டு பதங்களைப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். இதனால் 'என் உட்கருத்து அவ்விதந்தான்.'' ஆனால் வெளிப்படையாய்க் காண்பிப்பது கூடாது. வியவகார தசையிலிருக்கும் அக்ஞானிகளான ஜனங்களிடம் இதை வெளியிட்டால் அவர்களுக்கு பக்குவ சித்தமில்லாதபடியால் கெட்டுப்போய் விடுவார்களென்று அனுஷ்டானத்தில் காண்பிக்கவில்லையென்று கருத்து ஏற்படுகின்றது. இதனால், லோக வியவகாரத்திலிருக்கும் நம்போன்றவர்களுக்கு ஞானமென்பது, பணம் சம்பாதிப்பதிலும், உத்தியோகம் பண்ணுவதிலும்மாத்திரம்உபயோகப்படுமேயன்றி,சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கும் ஞானி என்ற பதத்திற்கு அற்பமேனும் இணையாகாதென்பது வெளிப்படையே. ஆசார்யாள் கூறியுள்ள நிலையில் ஒருவன் இருப்பின்,

निस्त्रैगुण्ये पथि विचरतः को विधिः को निषेधः ।

என்று அவனை விதிநிஷேதங்கள் கட்டுப்படுத்தாது. அவனுக்கும் உறங்குகிறவன் கையினின்றும் பழம்தானாகவே நழுவுது போல் உலகவாஸனை தானாகவே விலகிவிடும். ஆங்காங்கு உபந்யாஸம் பண்ணி விலக்கவேண்டாம். சாஸ்திரங்களிற்சொல்லியபடி உத்தமமான ஞானமேற்படாத நம்போன்றவர்கள் விதிநிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டே தீரவேண்டுமேயன்றி பெரியோர்கள் நடத்தையை இத்தகைய காரியங்களில் பின்பற்றுவது தவறு. இக்கருத்தைக் கொண்டுதான் ஆசாரியரைப் பரீக்ஷைசெய்யவந்த பரமேச்வரன் வியவகார தசையிலிருப்பவர்



களுக்குச் சாஸ்திர நிர்ப்பந்தத்தையனுசரித்து ஜாதி, ஆச்ரமம் இவைகளின் வேற்றுமையை அவசியம் அனுஷ்டிக்கவேண்டும். இவ்வித நியமமல்லாத சிறந்த மேலான ஆச்ரமத்திலிருக்கும் இவர் எவ்விதமிருக்கிறாரென்பதையறியவேண்டி சண்டாளவேஷத்துடன் வந்தாரென்று நன்கு வெளியாகவில்லையா? ஆகையால் நம்பரமாசார்யாவர்களால் சொல்லப்பட்ட ''சண்டாள'' என்ற சுலோகத்தின் கருத்தைப் பின்பற்ற நம்போன்றவர்கள் அதிகாரிகளல்லவென்று ஏற்படுகிறது.

## 7. பூர்வபக்ஷிகளின் ஆசங்கை.

ஒரே சரீரத்தில் ஜாதிமாறுகிறதில்லை என்று கூறினால் க்ஷத்திரிய ஜாதியில் ஜனித்த விச்வாமித்திரருடைய சரீரமானது அதேஜன்மாவில் பிராமண சரீரமாக ஆகிவிட்டதென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றனவே. இதையும் மறுக்க எப்படி முடியும்? கர்மாவினால் ஜாதிமாறுமென்பதை சிறந்த இந்த ஒரு பிரமாணத்தைக்கொண்டே சாதிக்கிறோமென்கிறார்கள்.

1. ஸமாதானம். இக்கேள்விக்கு விடையளிக்க நாம் அதிகம் சிரமப்படவேண்டியதில்லை. விச்வாமித்திரருடைய சரீரமானது ஒரேஜன்மாவில் உயர்ந்தஜாதிக்குமாறிவிட்டதென்பதைப் பூர்வபக்ஷிகள் சாஸ்திரப் பிரமாணத்தைக்கொண்டே கூறவேண்டுமேயன்றி நேரில் பார்த்தோமென்று சொல்லவியலாது. எந்த சாஸ்திரத்தை இவர்கள் ஆதாரமாகக்கொண்டு இவ்விதம் கூறுகிறார்களோ அதேசாஸ்திரத்தை இன்னும் கொஞ்சம் கவனித்திருந்தால் இதைப்பற்றிய சங்கைக்கு அவர்களுக்கு இடமிருந்திராது. இப்பொழுதாவது அதை அவர்களுக்கு அறிவிப்போம்.

பீஷ்மாசார்யரிடம் தர்மபுத்திரர் பலவிஷயங்களைக் கேட்டுக்கொண்டுவரும் சமயத்தில் பிராமண்யமானது ஒருசரீரத்தில் கீழ்ஜாதியாரால் அதேஜன்மத்தில் அடையமுடியாதென்று பீஷ்மர் செப்பியதைக்கேட்டு அடியில்வருமாறு கூறுகின்றார்,

ब्राह्मण्यं यदि दुष्प्राप्यं त्रिभिर्वर्णैर्नराधिप ।
कथं प्राप्तं महाराज क्षत्रियेण महात्मना ॥
विश्वामित्रेण धर्मात्मन् ब्राह्मणत्वं नरर्षभ ।
श्रोतुमिच्छामि तत्त्वेन तन्मे ब्रूहि पितामह ॥

ஒரே ஜன்மாவில் கீழான மூன்று வர்ணத்தோர்களால் பிராமணத்தன்மையடைய முடியாதென்றால் கௌசிகர் எவ்விதம் அதே ஜன்மாவில் பிராமண்யத்தை யடைந்தாரென்பதைத் தெரிவிக்கவேண்டுமென்று தர்மபுத்திரர் வினவ பீஷ்மர் பின்வருமாறு சொல்லலுற்றார். ரிசிகர் என்கிற பிராமணரிஷியின் பார்யையும், காதி என்கிற க்ஷத்திரியனின் பார்யையும் தாங்கள் ஆண்குழந்தையை அடையவேண்டுமென்று ஒரு மஹரிஷியை வேண்டினார்கள். உடனே அம்மஹரிஷி அவ்விருவர்களுக்கும் திவ்யமான பாயஸத்தை வரனாகவளித்தார். அதைப்பெற்ற அத்தஸ்திரீகள் ரிஷிகொடுத்தபடியே உபயோகிக்காமல் மாற்றி உபயோகித்துவிட்டார்கள். அதனால் ரிசிகரென்கிற பிராமணருக்குப் பிறக்கவேண்டிய விசுவாமித்திரர் காதிக்கும், காதிக்குப் பிறக்கவேண்டிய க்ஷத்திரியக்குழவி ரிசிகருக்குமாக மாறிவிட்டது. இதனால் விசுவாமித்திருடைய பீஜம் பிராமணபீஜமாதலென்றும், அம்மஹரிஷியளித்த அப்பாயஸத்தை மாற்றி அருந்தினமையால் க்ஷத்திரியஸ்திரீ கர்ப்பத்திலிருக்கும்படி நேரிட்டதென்றும், இதனாலேற்பட்ட தோஷத்தைச் சகடுந்தவத்தால் போக்கடித்து, உண்மையான பிராமண்யத்தை யடைந்தாரென்றும், ஆகவே, விசுவாமித்திரர் பிராமணபீஜமேயல்லாமல் க்ஷத்திரிய பீஜமன்று என்றும் ஸமாதானம் சொல்லிமுடித்தார். மேலும், விசுவாமித்திரருக்குப் பிராமண்யம் சுலபமாய்க்கிடைக்கவில்லை. ஒவ்வொரு திக்கிலும் பல்லாயிரம் ஆண்டு கடுந்தவம் புரிந்து முடிவில் இவரது தவத்தின் வலிமையால் பிரம்மாதிகள் பிரத்தியக்ஷமாகி வஸிஷ்டர்முதலான மஹரிஷிகளுடன் இவருக்குப் பிரம்மரிஷி என்கிற பெயரையளித்ததாகக் கூறப்பட்டிருக்கி



றது. இன்னும் இவ்விஷயத்தை விஸ்தாரமாய் அறியவிரும்புவோர்கள் பாரதம் அநுசாஸநிகபர்வம் 3, 4 வது அத்தியாயங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இக்காலத்திலும் விசுவாமித்திரரைப்போல் ஒருவர் தம் உக்கிரதபஸ்ஸால் சதுர்முகனை வரவழைத்து அவர்முன்னிலையில் உயர்ந்தஜாதியென்று பெயரேற்பட்டால் அதையங்கீகரிப்பதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமிராது. அத்தகைய சக்தியில்லாத இக்காலத்தியபோலிஜனங்கள் மஹான்களுடைய கதைகளை எடுத்துக்காட்டித் தாமும் அவர்களைப்போல் ஏன் ஆகக்கூடாதென்று கூச்சலிடுவதால் யாதுபயன்? ஆகையால் இதனாலும் அவர்களுக்கு அநுகூலமில்லை.

"8. பூர்வபக்ஷிகளின் அபிப்பிராயம்."

சென்ற ருதிரோத்காரி-ளு மார்கழி-மீ 20உ யன்று வெளிவந்த நவசக்தி என்னும் பேபரில் காகிநாடாவில் நடந்த ஆசாரசீர்திருத்த மகாநாட்டில் கனம் ஸர். டி. ஸதாசிவய்யர் அவர்கள் செய்த பிரஸங்கத்தின் ஸாராம்சமென்று பெயரிட்டு வரையப்பட்டிருந்த விஷயத்தில் ஜாதி யென்று உபக்கிரமித்து சில விஷயங்களைக்கூறி முடிவில் பிறப்பினாலும் ஸம்ஸ்காரங்களினாலும், வேதங்களைப் படிப்பதாலும், பரம்பரையாலும் எவரும் பிராமணர்களாகிவிட மாட்டார்கள் என்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், எந்தப்பிராமணன் மததர்மங்களைப்படித்து அவைகளையுபதேசிக்கத் தவறுகின்றானோ அவன் பிராமணனல்லாதவனாகிறானென்றும், சூத்திரன்பிறப்பினால் பிராமணனாகிவிடுகிறான் என்றும் பிராமணன் நடவடிக்கைகளினால் சூத்திரனாகிவிடுகிறான் என்றும், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் விஷயமும் இவ்விதமே என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

8. "ஸமாதானம்" இப்பொழுது நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தில் இதுவும் ஸம்பந்தப் பட்டிருப்பதால் இதைப்பற்றியும் கொஞ்சம் விசாரிப்போம்.

ஆஸ்திகர்களான ஹிந்துக்களால் சகல விஷயங்களிலும் பிரமாணமாகக் கொள்ளப்பட்டவை மூன்று. அவையாவன:— முதல்பிரமாணம் வேதம். இரண்டாவது ஸ்மிருதி. மூன்றாவது புராணம் முதலியவையாகும். இவைகளில் முக்கியமான இரண்டு பிரமாணங்களையும் விட்டு மூன்றாவதான மஹாபாரதத்தைப் பிரமாணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. அதிலும் ஒரு வசனத்தைக் குறிப்பிட்டுத் தங்கள்கொள்கைக்கு ஆதாரமாயுள்ளது என்று நன்கு நிரூபிக்கப்படவில்லை. ஆயினும், இவர்கள் எந்த ஸந்தர்ப்பத்தைத் தவறாக இவர்களுக்கு அநுகூலமென்று நினைத்திருப்பார்களோ, அதையே எடுத்து நன்கு நிரூபிப்பாம். மஹாபாரதம் வனபர்வம் 219-வது அத்தியாயத்தில், ஓர் வேதியன் க்ஷத்திரியவிருத்தியி லிருந்துவருங்கால், ஒருசமயம் அறியாமையினால் குற்றமற்ற ஒரு மஹரிஷியை அடித்துவிட்டபடியால் அவர் இந்த பிராமணனை வேடனாகச் சபித்துவிட்டார். பிறகு இவ்வேதியன் தவறாக நடந்து விட்டதென்று பலவாறாக அந்த ரிஷியை வேண்ட, அம்மஹான் சாபத்தை யநுபவித்தே தீரவேண்டுமென்றும், ஆயினும் பூர்வ ஜன்ம சரிதம்மட்டிலும் மறக்காமல் ஞாபகத்தி லிருக்குமென்றும் அநுக்கிரகித்தார். இதைப்பெற்ற அவ்வந்தணன், தர்மவியாதன் என்கிற பெயருடன் வேடஜாதியிற் ஜனித்து ஜாதிஸ்மரனாகஇருக்கும்பொழுது கௌசிகனென்றவோர் பிராமணன் அவனிடம்சென்று சில தர்மங்களைக் கேட்டுப் பிறகு அவ்வேடன்சரிதத்தை விசாரிக்கும்பொழுது அவன் நடந்தவண்ணம் கூறினான். அதைக் கேட்ட பிராமணன்வேடனைப் பார்த்து அடியில்வருமாறு உரைத்தான்.

कंचित्कालं शुश्रूषतां वै ततो वै भविता द्विजः ।
सांप्रतं च मते मेऽसि ब्राह्मणो नात्र संशयः ॥
ब्राह्मणः पतनीयेषु वर्तमानो विकर्मसु ।
दांभिको दुष्कृतप्रायः शूद्रेण सदृशो भवेत् ॥
यस्तु शूद्रो दमे सत्ये धर्मे च सततोत्थितः ॥
तं ब्राह्मणमहं मन्ये वृत्तेन हि भवेद् द्विजः ॥



"கொஞ்சகாலம் நீ பொறுத்துக்கொள். பிறகு த்விஜனாக ஆகிவிடுவாய்" இப்பொழுதே நீ பிராமணனென்று எனது அபிப்பிராயம். இதுஉண்மையே. விதிக்குமுறணாகக் கெட்டகர்மாக்களில் செல்லுகிறவனும், டம்ப அகங்காரங்களோடுகூடியவனுமான வேதியன் சூத்திரனுக்கு ஒப்பாவான். எந்த சூத்திரன், இந்திரியநிக்கிரஹம் பெற்று ஸத்யத்தைக் கைவிடாமல் எப்பொழுதும் தர்மகாரியத்தில் பற்றுதலுள்ளவனாயிருக்கிறானோ, அவனை நடத்தையால் பிராமணனென்று நான் கருதுகிறேன்" என்று இதன் பொருள்.

ஒரு ஜமீன்தாருக்கு, அவரது காலவித்தியாசத்தால் அவரது சொத்தை மற்றொருவன் ஆக்கிரமித்துக்கொள்ள, அதை அடையவேண்டி கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடுக்கப்பட்டு விசாரணையில் இருக்கும் சமயத்தில், அந்த ஜமீன் தன் வக்கீலிடம் ஏகாந்தத்தில் தன் ஜமீன் பட்டம் கிடைக்குமோ அல்லது இக்கீழான நிலைமையிலேயே இருந்துவிடுவேனோவென்று கஷ்டப்படுங்காலத்தில் 'நான் நிச்சயமாய்ச் சொல்கிறேன், நீர் இப்பொழுதே ஜமீன்தார்தான்' என்று அவனை திருப்திசெய்யும்பொருட்டுச் சொன்னாலும், அந்த வாக்கு கோர்ட்டார் தீர்ப்புச்செய்த பிறகுதான் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரமுடியுமேயல்லாது, அச்சமயத்தில் ஜமீன்தாருக்கு அற்பதிருப்தியை யுண்டுபண்ணுவதைத்தவிர வேறு எவ்விதப்பயனும் யாப்படி ஏற்படாதோ, அதுபோலவே முன்ஜன்மாவில்பிறந்தவேதியனாயிருந்த தனக்கு இவ்விதம் தாழ்ந்தஜாதியில் பிறக்க நேர்ந்ததேயென்று துன்புறும் அந்த தர்மவியாதனைத் திருப்திசெய்யும் நிமித்தம் "நான் இப்பொழுதே உன்னைப் பிராமணனாக எண்ணுகிறேன்" என்று சொல்லியிருக்கிறாரேயல்லாமல், அவ்வேடன் அப்பொழுதே பிராமணனாக ஆகிவிட்டானென்று பொருள்கொள்வதற்குச் சற்றும் இடமில்லை. இவ்விதமின்றி, உண்மையில் அச் சமயத்திலேயே அவனைப் பிராமணனாகவே கருதி இவ்விதம் சொல்லியிருப்பாராயின்,

"कंचित्कालं मृष्यतां वै" கொஞ்சகாலம் பொறுத்துக்கொள் என்று இறுதியில் கூறியது பயனற்றதாகும். ஆகவே, அப்பிராமணன் கூறியதற்கு "கொஞ்சகாலம் பொறுத்துக்கொள். வியஸனப்படாதே. பிறகு நீ சாபம்நீங்கித் துவிஜனாக ஜனிப்பாய்" என்றல்லவோ அதன் பொருள். முதலில் சொற்பகாலத்தில் நீ சாபம்நீங்கிப் பிராமணனாக ஆகிவிடுவாயென்றும், கவலை வேண்டாமென்றும் கூறி, உடனே அவனைப்பார்த்து "நான் இப்பொழுதே உன்னைப் பிராமணனாகக் கருதுகிறேன்" என்றால் இதை யெவ்வாறு உண்மையெனக் கருதமுடியும்? மேலும், மஹாஞனை துர் மஹரிஷியினால் ஒருகாலக்கணக்கு குறிப்பிடப்பட்டுக் கோபத்தினால் தாழ்ந்தஜாதியில் ஜனிப்பாய் என்று சபிக்கப்பட்ட ஒருவனை, இடையில் ஒருவர் "நான் உன்னைப் பிராமணனாகக் கருதுகிறேன்" என்று சொன்னால் ஜாதியை எப்படி விலக்கமுடியும்? தனக்குத்தெரியாத சில தர்மங்களை இந்த வியாதனிடமிருந்து தெரிந்துகொண்ட அந்த பிராமணன், அவ் வேடனைப்பார்த்து "இப்பொழுது நான் உன்னைப் பிராமணனாகக் கருதுகிறேன்" என்று சொன்னதனால் மஹாதபஸ்வியான மஹரிஷியின் சாபத்தின் வலிமை எங்ஙனம் குன்றும்? ஆகையால் இதை உண்மையாகநினைப்பது தவறு. நிற்க, தனக்குரிய தர்மங்களை விட்டுக் கெட்டவழிகளில் செல்லும் பிராம்மணன் சூத்திரனுக்கொப்பாவான் என்று கூறியிருக்கிறார். சூத்திரன்போல் ஆகிறான் என்பதால் வைதிகமானகர்மாக்களுக்கும் விவாஹம் முதலான சம்பந்தங்களுக்கும் பங்திபோஜனத்திற்கும் அவன் அருகனல்லவென்று கருத்தேயன்றி, அவன் அப்பொழுதே சூத்திர ஜன்மாவை அடைந்துவிடுகிறானென்றும், சூத்திரர்களோடு ஸம்பந்தத்தைப்பெறவேண்டுமென்றும் கருத்தல்ல. எத்தகைய கெட்டகாரியங்களைச் செய்தாலும், அல்லது எத்தகைய நல்லகர்மாக்களைச் செய்தாலும் எந்தஜாதியிற் பிறந்தவனாயினும் அதே ஜன்மாவில் உயர்ந்த ஜாதிக்கோ, தாழ்ந்த ஜாதிக்கோ மாறமுடியாது. இவ்விதமே சூத்திரன் தனக்குரிய தர்மங்களைச் சரியாய் அனுஷ்டித்துவந்தால் அவனைப் புகழ



வேண்டி அவனைப் பிராமணனாக எண்ணுகிறேன் என்று சொல்வது வழக்கமாயினும், மேலே கூறியுள்ளபடி, ஜாதி மாறாதென்பது திண்ணம். இங்கு கூறப்பட்டவசனங்கள் அவர்களின் அபிப்பிராயத்திற்கு அற்பமேனும் இடங்கொடுக்கவில்லையென்று நன்கு விளங்கவில்லையா?

இனி யக்ஷப்பிரசனத்தில் இருக்கும் வசனமும் இவர்களுக்கு அனுகூலமில்லையென்பதையும் நிரூபிப்பாம். அதாவது, வனபர்வாவில் தர்மபுத்திரரைப் பார்த்து யக்ஷன் வினவுகிறான்.

राजन् कुलेन वृत्तेन स्वाध्यायेन श्रुतेन वा ।
ब्राह्मण्यं केन भवति प्रब्रूह्येतत्सुनिश्चितम् ॥ अ-314-109.

ஹே! அரசனே! பிராமண்யமென்பது குலத்தினாலேயா? விருத்தியினாலேயா? வேதாத்யயனத்தினாலேயா? சாஸ்திரக்ஞானத்தினாலா? எதனால் குறைவடையாமல் இருக்கிறது என்பதைத் தீர்மானமாய்ச் சொல்லவேண்டும் என்றார். அதற்குத் தர்மபுத்திரர்,

शृणु यक्ष कुलं तात न स्वाध्यायो न च श्रुतम् ।
कारणं हि द्विजत्वे च वृत्तमेव न संशयः ॥ 210
वृत्तं यत्नेन संरक्ष्यं ब्राह्मणेन विशेषतः ।
अक्षीणवृत्तो न क्षीणः वृत्ततस्तु हतो हतः ॥
पठकाः पाठकाश्चान्ये येचान्ये शास्त्रचिन्तकाः ।
सर्वे व्यसनिनो मूर्खा यः क्रियावान् स पण्डितः ॥
चतुर्वेदोऽपि दुर्वृत्तस्स शूद्रादनिरिच्यते ।
योऽग्निहोत्रपरो दान्तस्स ब्राह्मण इति स्मृतः ॥ 213

பிராமண்யம் குறைவடையாமலிருக்கவேண்டுமானால், குலம் வேதசாஸ்திராத்யயனம் இவைகள் காரணமல்ல. அந்த ஜாதிக்குரிய தர்மானுஷ்டானத்தை நன்கு அனுஷ்டித்தலே முக்கியமாகும். இங்கு

कारणं हि द्विजत्वे च वृत्तमेव न संशयः ।

என்கிற இவ்வசனத்தால் ஜன்மஸித்தமான த்விஜத்தன்மை குன்றாமலிருப்பதற்கு அதற்குரிய தர்மானுஷ்டானமே முக்கிய காரணம் என்று போதிக்கப்படுகிறதேயன்றி, த்விஜர் என்று கூறப்பட்ட பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்கிற இந்த ஜாதிகளின் உற்பத்திக்கே वृत्तम् அஃதாவது, ஸத்கர்மானுஷ்டானம் காரணமென்றும், அதனாலேயே ஜாதியின் வியவஸ்தையென்றும் பொருளேற்படாது. முன்னமே ஜன்மாவினாலேற்பட்ட ஜாதியின் பெருமையைப் பெறுவதற்கு அதற்குரிய ஸத்கர்மானுஷ்டானம் காரணமென்று தான் கூறவேண்டும். இக்கருத்தைக்கொண்டுதான் இதற்கு அடுத்த

वृत्तं यत्नेन संरक्ष्यं ब्राह्मणेन विशेषतः ॥

என்கிற வசனத்தில், ब्राह्मणेन என்றபதம் போட்டிருக்கிறார். பிராமணனானவன் மிகவும் பிரயாஸைப்பட்டாகிலும் தனக்குரிய தர்மங்களை நன்கு பாதுகாக்கவேண்டுமென்பது அதன் கருத்து. பூர்வபக்ஷிகளின் அபிப்பிராயப்படி கர்மானுஷ்டானத்தினுற்றான் ஜாதிஸித்தி என்று தர்மபுத்திரருக்கும் அபிப்பிராயமிருப்பின், கர்மானுஷ்டானத்திற்குப்பிறகு அல்லவோ ஜாதி ஏற்படவேண்டும். கர்மானுஷ்டானத்தைச் செய்யென்று கூறும் சமயத்திலேயே பிராமணன் என்கிற பெயர்கொடுத்தால் அதெப்படிப் பொருந்தும்? தர்மபுத்திரர் மாறுதலாய்க்கூறியிருக்கிறாரென்று சாதிப்பது தவறாகும். எம்மால் முற்கூறப்பட்ட ஜன்மஸித்தமான ஜாதியை அங்கீகரித்தே இவர் இவ்விதம் சொல்லியிருக்கிறாரென்று பிராமணபதத்தைப் பிரயோகம் செய்திருப்பதாலேயே நன்கு விளங்கவில்லையா? பிராமணஜாதியில் பிறந்தவர்கள் தமக்குரிய கர்மானுஷ்டானங்களை நன்கு ரக்ஷிக்கவேண்டும் என்றால் கர்மானுஷ்டானரக்ஷணத்திற்கு உத்தேசியமான பிராமண்யம் பூர்வஸித்தமாயிருப்பதால் பாதகமில்லாமல் சம்பவிக்கலாம். இங்கு அந்தந்தஜாதிக்குரிய தர்மங்களை நன்கு அனுஷ்டிப்பவர்களைப்புகழ்ந்தும், அனுஷ்டிக்காதவர்களை இகழ்ச்சியாக



வும் சொல்லி, ஸ்வதர்மத்தை நன்கு அனுஷ்டிக்கவேண்டுமென்று தர்மபுத்திரர் கூறியிருக்கிறாரேயல்லாமல் விருத்தத்தால் ஜாதி உண்டாகிறதென்று அவர் கருதவில்லையென்பது திண்ணம். ஆகையாற்றான் இதற்குமுன் இந்தப்பிரகரணத்திலேயே யக்ஷனால்,

श्राद्धं मृतं कथं वा स्यात् । ३५

சிராத்தம் எப்படிச் செய்தால் உபயோகமற்றதாகும்? என்று வினவப்பட்ட இடத்தில் தர்மபுத்திரர்,

मृतमश्रोत्रियं श्राद्धम् ।

வேதசாஸ்திராத்யயனம் செய்யாதவனை வரித்துச்செய்தால் நஷ்டமாகும் என்று விடையளித்திருக்கிறார். பிறகு யக்ஷன் श्राद्धस्य कालमाख्याहि சிராத்தம்செய்வதற்குரிய காலத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்டார். அதற்கு தர்மபுத்திரர், श्राद्धस्य ब्राह्मणः कालः சிராத்தம்செய்வதற்குப்பிராமணனொருவனேதான் காலம் என்று விடையளித்தார். இவ்விரண்டு விடைகளால், வேதாத்யயனம்செய்த பிராமணனைக் கண்டால் சிராத்தம் நடத்தவேண்டுமென்று தர்மபுத்திரர் அபிப்பிராயப்படுவதாக ஏற்பட்டது. இங்கு வேதாத்யயனம்செய்த பிராமணன் என்றால் பிராமணவம்சத்தில் ஜனித்து வேதாத்யயனம்செய்தவன் என்று தெரிகிறது. இங்கு இவ்விதம் கூறி மேல்வசனத்தில் குலத்தாலும், வேதாத்யயனத்தாலும் பிராமண்யமில்லையென்று அவரேகூறினார் என்றால் அதெப்படிப்பொருந்தும்? மேலும், இதே மஹாபாரதத்தில் பார்வதிதேவியானவள் தன் பதியிடம்

इमे हि वर्णाश्चत्वारो विहिता स्वस्वभावतः ।
उताहो क्रियया वर्णास्संभवन्ति महेश्वर ॥

பிரஸித்தமாய் விளங்கும் இந்நான்கு வர்ணங்களும் ஸ்வபாவத்தினாலேயே இவ்விதம் ஸ்ருஷ்டிக்கப்பட்டனவா? அல்லது குணத்தையனுஸரித்து ஏற்பட்டனவா? என்று வினவினள்.

स्वभावादेव विद्यन्ते चत्वारो ब्राह्मणादयः ।
एकजात्या सुदुष्प्रापमन्यवर्णत्वमत्र हि ॥
तच्च कर्मविशेषेण पुनर्जन्मनि विन्दते ।

ஸ்ரீ பரமேச்வரன் பிராமணாதி நான்குவர்ணங்களும் ஸ்ருஷ்டி காலத்திலேயே ஸ்வபாவமாயேற்பட்டிருக்கின்றன. ஒருஜன்மாவிலிருக்கும்பொழுதே வேறுஜாதியை அடைவதென்பது முடியாது. சிறந்த ஸ்வதர்மங்களை நன்கு அனுஷ்டித்தால் மறுபிறப்பில் மேல்ஜாதியை அடையலாம் என்று கூறினர். மேலும் சூத்திரஜாதியிற்பிறந்த விதுரரென்கிறவர் ஞானவானிடத்தில் தர்மபுத்திரர் பல தர்மங்களைக் கேட்குங்கால் தம்மால் சொல்லக் கூடியவரையில் அறிவித்து,

शूद्रयोनावहं जातो नातोऽन्यद् वक्तुमुत्सहे ।

நான் சூத்திரயோனியில் பிறந்தவனாகையால் இதற்குமேலுள்ள தர்மஸூக்ஷ்மங்களைச் சொல்ல எனக்குத் திருப்தியில்லை என்று சூத்திரர் கூறத்தகாத தர்மங்களைச் சொல்லாமல் மறுத்துவிட்டாரென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது. தற்காலத்தில் குணகர்மாவால் ஒரேஜன்மாவில் மேல்ஜாதியை அடையலாமென்று சிலர் கூறும் சாஸ்திரங்களை அவர் ஏன் படிக்கவில்லையோ தெரியவில்லை. இவர்களைப்போல் படித்து உண்மை அறிந்திருந்தால் இவ்விதம் சொல்ல நியாயமில்லை. சென்ற டிசம்பர்-மீ வெளிவந்த "அகஸ்தியன்" 2-வது புஸ்தகம் 3-வது சஞ்சிகையில் "ஹிந்துமதம்" என்கிறவியாஸத்தில் வர்ணாச்ரமங்களென்பது முன்பு இல்லையென்றும், இப்பொழுது ஏற்பட்டிருக்கிறதென்றும், யாரோ சொல்வதாகவும் ஹிந்துஸமுதாயத்திலிருந்தும் சில காலத்திற்குமுன்புதான் சிலர் க்ஷத்திரியராகப் பிரிந்தனரென்றும் கூறி, இதற்கு ஆதாரமாக

ते द्विजा क्षत्रतां गताः ।

என்கிற பாரதவசனத்தைக் காட்டி சூத்திரர்கள் என்று கூறப்படும் சிலர் தொழில்முறையால் வேறுபட்டனரேயன்றி மற்ற



மூன்று ஸமுதாயத்தினரும் விவாஹம், பங்க்திபோஜனம் முதலியன நடத்திவந்ததாக மனு கூறுகின்றார். என்று பலவாறாகத் தமக்குத் தோன்றியவாறு பாரதமென்றும், மநுவென்றும், கிரந்தப்பெயரைக் காட்டி ஸாமான்யஜனங்களைப் பயமுறுத்துகின்றார். பாரதத்தில் ஸ்ருஷ்டியால் ஜாதிபேதமேற்பட்டிருக்கிறதென்று கூறும் பல வசனங்களை வெளியிட்டிருக்கிறோம். மநுஸ்ம்ருதியில் சூத்திரர்களோடு எல்லாஜாதிகளுக்கும் விவாஹம் முதலியவை நடந்ததாகக் கூறுகின்றார். அதுவும் சரியல்லவென்று எடுத்துக்காட்டுவோம்.

இது வரையில் பூர்வபக்ஷிகள் தங்களுக்காதாரமென்று கூறும் வசனங்களை முறையே எடுத்து அவைகளின் உண்மையான அர்த்தத்தை வெளியிட்டு, இவர்கள் கொள்ளும் அபிப்ராயம் முற்றிலும் தவறென்றும், நன்கு ஆராய்ந்து பார்த்தால் அவைகள் நமக்கே ஸாதகமாகிறதென்றும் தெரிவித்தோம். இனி பிறப்பால் தான் ஜாதிப்பிரிவு என்பதற்கு ஆதாரமான பிரமாணங்களையும் கிரமமாக எடுத்துக்காட்டுவோம்.

सर्वस्यास्य तु सर्गस्य गुप्त्यर्थं स महाद्युतिः ।
मुखबाहूरुपज्जानां पृथक्कर्माण्यकल्पयत् ॥ म-8-1-87.

மிகவும் மகிமைவாய்ந்த பிரம்மா, தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட சகலப் பிராணிகளையும் பாதுகாக்கவேண்டி தன்னுடைய முகம் கை, கால் இவைகளினின்று முண்டான பிராமணர் முதலான நான்கு ஜாதிகளுக்கும் முறையே வெவ்வேறான கர்மாவையே ஏற்படுத்தினார் என்று மநு கூறியிருக்கிறார். இதனால் ஜாதிப்பிரிவானது ஸ்ருஷ்டிகாலத்திலேற்பட்டதென்றும் அதேசமயத்தில் அந்தந்த ஜாதிக்குரிய கர்மாக்களும் பகவானால் கற்பிக்கப்பட்டதென்றும் தெரிகிறது.

सर्ववर्णेषु तुल्यासु पत्नीष्वक्षतयोनिषु ।
आनुलोम्येन सम्भूता जात्या ज्ञेयास्त एव ते ॥ म-10-5.

நான்கு ஜாதிகளிலும் அந்தந்த ஜாதிகளிலிருக்கும் புருஷர்களுக்கு தங்கள் ஜாதிஸ்திரீகளை முறைப்படி விதிப்படி மணம் புரிந்து ஏற்படும் சந்ததிகள் தான் அந்தந்த ஜாதியாவார்கள்.

मुखबाहूरुपज्जानां या लोके जातयो बहिः ।

பிரமனிலுடைய முகம் முதலான அங்கங்களிலிருந்து உண்டான நான்கு ஜாதிகளுக்கும் வெளிப்படையான பாஹ்ய ஜாதிகளுண்டோ அவை

क्षत्रविट्शूद्रयोनिस्तु ह्यपदं दातुमशक्नुवन् ॥

க்ஷத்திரிய, வைசிய, சூத்ர என்கிற இந்த ஜாதியில் ஜன்மமடைந்தவர்கள் என்று "யோநிஸ்து" என்கிறபதத்தால் வெளியிட்டிருக்கிறார்.

चातुर्वर्ण्यं त्रयो लोकाश्चत्वारश्चाश्रमाः पृथक् ।
भूतं भव्यं भविष्यं च सर्वं वेदात् प्रसिध्यति ॥ म-12-97.

நான்கு ஜாதி மூன்று லோகங்கள் நான்கு ஆச்ரமங்கள் முதலான இவையாவும் வேதத்திலிருந்தே வெவ்வேறாக சித்திக்கின்றன, என்று 12 வது அத்தியாயத்தில் மநு கூறியிருக்கிறார்.

उत्तमाङ्गोद्भवाज्ज्येष्ठ्याद्ब्रह्मणश्चैव धारणात् ।
सर्वस्यैवास्य सर्गस्य धर्मतो ब्राह्मणः प्रभुः ॥

பிரமனிலுடைய அங்கங்களுக்குள் சிறந்ததான முகத்திலிருந்து உண்டானதாலும் இதரர்களைக்காட்டிலும் மேலாயிருப்பதாலும் வேதசாஸ்திரங்களைத் தரிப்பதாலும் அவனால் சிருஷ்டிக்கப்பட்ட சகலபிராணிகளுக்கும் விதிப்படி பிராமணன் பிரபுவாகிறான் என்றும் மநுவே வெளியிட்டிருக்கிறார்.

மநுஸ்மிருதியில் இவைபோன்ற வசனங்கள் பலவிருப்பினும் விரிவாகுமென்று எடுத்துக்காட்டவில்லை. இவ்வசனங்களால் பிறப்பால்தான் ஜாதி ஸித்திக்கிறதென்றும் குணகர்மாவால் மத்தியிலேற்படுகிறதில்லை யென்றும் மநுவின் அபிப்பிராயமென்று நிச்சயமாய்த் தெரிகிறது. மற்றுமுள்ள ஸ்மிருதிகளைக் கவனிப்போம்.



सवर्णेभ्यस्सवर्णासु जायन्ते हि सजातयः । या-स्मृ-90.

ஒரே ஜாதியிலிருக்கும் தம்பதிகளால் உண்டுபண்ணப்படும் ஸந்ததிகள் அந்த ஜாதியாக ஆகின்றன என்று யாக்ஞவல்க்யரும் பிறப்பாலேயே ஜாதி வியவஸ்தையென்று கருதுகிறார்.

त्रयो वर्णा द्विजातयः ब्राह्मणक्षत्रियवैश्याः ।
तेषां मातुरग्रेऽधिजननं द्वितीयं मौञ्जिबन्धनात् ॥ वसिष्ठ-अ-2.

மூன்று வர்ணங்களுக்குத் துவிஜாதிகளென்று பெயர். அவையாவன:— பிராமணன், க்ஷத்திரியன், வைச்யன், இவர்களுக்கு முதல் ஜன்மா மாதாவினிடமிருந்தும் இரண்டாவது மௌஞ்சி பந்தனமென்கிற உபநயன ஸம்ஸ்காரத்தாலும், என்று வசிஷ்டர் கூறுகின்றார். [அத—2] பின்னும்—

गायत्र्या छन्दसा ब्राह्मणमसृजत् त्रिष्टुभा राजन्यं जगत्या
वैश्यं न केनापि छन्दसा शूद्रमित्यसंस्कार्यो विज्ञायते ॥

காயத்திரீ சந்தஸ்ஸால் பிராமணனையும் திரிஷ்டுப் சந்தஸ்ஸால் க்ஷத்திரியனையும், அனுஷ்டுப்சந்தஸ்ஸால் வைச்யனையும்சிருஷ்டித்தார் என்றும் நான்காவது அத்தியாயத்திலும் சொல்லியிருக்கிறார். போதாயனரும், மற்றும் சில ரிஷிகளும் இவ்விதமே வெளியிட்டிருக்கிறார்கள்.

ब्राह्मण्यां ब्राह्मणेनैव ह्युत्पन्नो ब्राह्मणस्स्मृतः ॥

பிராமணஸ்திரீயினிடத்தில் பிராமணனால்உண்டுபண்ணப்பட்டவன் தான் பிராமணனாகிறானென்று ஹாரீதஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸூதஸம்ஹிதை

सर्वेषां जन्मना जातिर्नान्यथा कर्मकोटिभिः ।
पश्वादीनां यथा जातिर्जन्मनैव नचान्यथा॥ 12-51.

பசு, பக்ஷி முதலிய ஜாதிகளுக்கு ஜாதி எப்படி ஜன்மத்தினாலே யல்லாமல் கர்மத்தினாலில்லையோ அவ்விதமே மனிதர்களுக்கு

ருள்ளும் ஜாதிபேதமானது ஜன்மாவினால் மாத்திரம் இயற்கையாய் ஏற்படுமேயன்றி கோடிக்கணக்கான கர்மாக்கள் செய்தாலும் அந்த ஜன்மத்தில் மாற முடியாது என்று ஸூதஸம்ஹிதையில் சிவமாகாத்மியகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமத் ராமாயணத்தில் அயோத்யாகாண்டத்தில் ஸரயூநதியில் தீர்த்தமெடுத்த ரிஷியொருவரை தசரதர் யானை துதிக்கையால் தீர்த்தமெடுக்கிறதென்கிற பிரமத்தினால் சப்தவேதி யென்கிற பாணத்தைக் கொண்டு பிரயோகிக்க கடைசியில் கீழே அடிபட்டு விழுந்தவர் ஓர் ரிஷியென அறிந்து, பிர்மஹத்தி தோஷத்திற்கு நாம் ஆளாகிவிட்டோமே என்று வருந்துங்காலையில், அம்மஹரிஷி அவ்வேந்தனைப் பார்த்து "அஜாக்கிரதையாய் என் இவ்விதகாரியத்தைச்செய்தாய்" என்றுகண்டித்து, இவர் படும் துயரத்தை நீக்கவேண்டி நான் பிராமண ஜன்மத்திற் பிறந்தவனல்ல. ஆகையால் உனக்கு பிர்மஹத்தி தோஷம் ஏற்படாது என்று,

न द्विजातिरहं राजन् माभूत्ते मनसो व्यथा ।
ब्रह्महत्या कृतं पापं हृदयादपनीयताम् ।
शूद्रायामस्मि वैश्येन जातो जनपदाधिप ॥

என்கிற இவ்வசனத்தால் தசரதருக்குச் சமாதானம் சொல்லியிருப்பது பிரஸித்தமே. வால்மீகி மஹரிஷியால் முனி என்றும், ரிஷி என்றும் கூறப்பட்டவரும் தவம், ஞானம் முதலிய நற்குணங்கள் பொருந்திய இந்த ரிஷி பூர்வபக்ஷிகளின் அபிப்பிராயப்படி சிறந்த பிராமணனென்று தைரியமாய்ச் சொல்லவேண்டியிருக்க, அற்பங்கூடத் தனக்குப் பிராமண்யமிருக்கிறதென்று நினையாமல் நான் பிராமணனல்லவென்றும், பிராமணவதத்தாலுண்டாகும் பிர்மஹத்திதோஷம் உனக்கேற்படாதென்றும் ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறாரே. ஜன்மாவினாற்றான் ஜாதி ஏற்படுகிறது என்பதற்கு இஃது ஒன்று போராதா! இந்த ராமாயணத்திலேயே உத்தரகாண்டத்தில் ஒரு



வேதியன் சிறுவயதில் மரித்ததன் குமாரனை ஸ்ரீராமருக்கெதிரில் கொண்டுவந்துபோட்டு, அரசருடைய குற்றத்தால் என் குழவி இறந்துவிட்டானென்று பெருங் கூச்சலிட அதைச் செவியுற்ற கருணாநிதியான ஸ்ரீ ராகவன் மஹரிஷிகளைக் கொண்டு இதன் காரணத்தை ஆலோசிக்கும் ஸமயத்தில் நாரதமுனி அங்கு தோன்றி, தண்டகாரண்யத்தில் சம்பூகனென்கிற வோர் சூத்திரன் தவம் புரிகிறானென்றும், அவனைக் கொன்றால் இவ்வந்தணச் சிறுவன் பிழைப்பானென்றும் கூறினர். இவ்வசனத்தைக்கேட்ட அரசன் அக்கணமே தண்டகாரண்யஞ் சென்று தவம் புரியும் சம்பூகனை நோக்கி வினவியதாவது.

ब्राह्मणो वाऽसि भद्रं ते क्षत्रियो वा सुदुर्जयः ।
वैश्यस्तृतीयवर्णो वा शूद्रो वा सत्यवाग्भव ॥

நீ பிராமணனோ? அப்படியாயின் உமக்கு க்ஷேமம் உண்டாகட்டும். அல்லது பிறரால் ஜயிக்கமுடியாத க்ஷத்திரியனா? அல்லது மூன்றாவது ஜாதியான வைசியனோ? அல்லது சூத்திரனோ? உண்மையைக் கூறவேண்டுமென்று வினவ அவன் விடைபகரலுற்றான்.

शूद्रयोन्यां प्रसूतोऽस्मि शम्बूको नाम नामतः ।
देवत्वं प्रार्थये राम सशरीरो महायशः ॥
न मिथ्याहं वदे राम देवलोकजिगीषया ।
शूद्रं मां विद्धि काकुत्स्थ तप उग्रं समास्थितम् ॥

ஹே ராம! சூத்திரஜாதியில் நான் பிறந்தேன். என்பெயர் சம்பூகன். இச்சரீரத்துடன் மிகவும் கீர்த்திபெற்ற தேவபாவத்தை யான் விரும்புகிறேன், தேவலோகத்தை ஜயிக்கக்கருதிக் கடுந்தவம் புரியுமென்னைச் சூத்திரனென்று தாங்களறியவேண்டும், நான் பொய்யுரைக்கவில்லை என்றான். இதையறிந்த ஸ்ரீராகவன் அவனைச் சூத்திரனென்று நன்கறிந்துகொண்டு தன் பாணத்தால் அவனை வதம் செய்து பிராமணகுமாரனை பிழைப்பித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

தவத்தினால் பிராமணரடையேற்படும் பக்ஷத்தில் அவனுக்கு ஏன் ஏற்படவில்லை? அவனுக்குப் பிராம்மண்யம் சித்திக்கவில்லையென்பதோடில்லாமல் "பரதர்மோ பயாவஹ:" என்று பகவான் கீதாசாஸ்திரத்தில் சொல்லியபடி இதரஜாதியின் தர்மத்தை அவன் அனுஷ்டித்தபடியால் பிராம்மணகுமாரன் இறந்தான்; அவனை வதம்செய்தபிறகு இறந்தவன் பிழைத்தெழுந்தான். ஆகையால் குணகர்மாவால் ஜாதிமாறுகிறதென்று சொல்வது தவறே. கீழான ஜாதியிற்பிறந்த ஒருவன் தனக்குற்ற தர்மங்களை விட்டு வேறு ஜாதிக்கு விதிக்கப்பட்ட தர்மத்தையநுஷ்டிப்பானாகில் கொடியபாவத்திற்குள்ளாகி நரகத்தையடைவதைத் தவிர அற்பமேனும் பலம் கிட்டாதென்று நிச்சயமாய்த் தெரிகின்றது.

चातुर्वर्ण्यं मया என்கிற வசனத்தால் நான்குஜாதிகளும் அவரவர்களது முற்பிறவியில் செய்திருக்கப்பட்ட கர்மாவையனுசரித்து என்னால் சிருஷ்டிக்கப்பட்டன என்று பகவான் கூறி, இதையனுசரித்து,

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परन्तप ।
कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणैः ॥

என்று ஆண்டுபண்ணப்பட்ட பிராமணன், க்ஷத்திரியன் முதலான நான்குஜாதிகளுக்கும் அவரவர்களுடைய இயற்கையான குணங்களையனுசரித்து, முறையே கர்மப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. என்கிற இவ் வசனத்தால் முன்னமேயே பிறவியால் சித்தமாயிருக்கும் ஜாதிகளைப்பொருட்டு கர்மாக்களை பகவான் கூறியிருக்கிறாரேயன்றி, கர்மாவையனுசரித்து ஜாதி அவ்வப்பொழுது மாறுகிறதென்று கூறவில்லையாகையால், இவர்கள் கூறுவது தவறு.

லோககுருவான ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யரவர்கள் தம்மாலியற்றப்பட்ட விவேக சூடாமணி என்னும் பிரகரணத்தில்,

जन्तूनां नरजन्म दुर्लभमतः पुंस्त्वं ततो विप्रता ॥

பிராணிகளுக்கு மானிடப்பிறவி கிடைப்பதரிது. அது கிட்டி-



னும் புருஷனுமாக ஏற்படுவது சிரமம். அதிலும் அந்தணனாக ஜனிப்பது அரிதினுமரிது என்று நிரூபித்திருக்கிறார்கள். இதனாலும் பிறப்பாலேயே ஜாதிசித்தி ஏற்படுகின்றது.

இனி, பூர்வபக்ஷிகளின் அபிப்பிராயத்தை யங்கீகரித்தால் ஏற்படும் விரோதங்களையும் வெளியிடுவோம். பிறப்பால் ஜாதிப் பிரிவில்லை என்று கூறுகின்றவர்கள் மதத்தில், சிசு பிறந்தவுடன் அந்த சிசுவை இன்ன ஜாதியென்று தீர்மானிக்க முடியாது. கொஞ்சகாலம் சென்றபிறகு அதன் குணத்தையும், கர்மாவையும் அறிந்து, அவைகளுக்குத் தக்கவாறு இன்ன ஜாதியென்று தீர்மானிக்கலாம் என்கிற பக்ஷத்தில், குழந்தைபிறந்த 10 அல்லது 12-ம் நாளில் நாமகரணம் அதாவது பெயர்கூறவேண்டியது; மனு,

शर्मवद्ब्राह्मणस्य स्याद्राज्ञो रक्षासमन्वितम् ।
वैश्यस्य पुष्टिसंयुक्तं शूद्रस्य प्रेष्य संयुतम् ॥

பிராமணஜாதிக் குழந்தைக்கு பத்திரவர்மாவென்றும், மற்றுமுள்ள ஜாதிகளுக்கும் முறையே சக்திபாலன், தனபுஷ்டன், தீனதாஸன் என்றும் பெயரிடும்படி மனு சொல்லியிருக்கிறார், இவ்விதமே யாஜ்ஞவல்க்யஸ்மிருதியிலும் ஆசுவலாயனரும், மற்றும் சில ரிஷிகளும் செப்பியிருக்கிறார்கள். இவ்வசனங்கள் பயனற்றனவாகும். மேலும்,

चूडाकर्म द्विजातीनां सर्वेषामेव धर्मतः ।
प्रथमेऽब्दे तृतीये वा कर्तव्यं श्रुतिचोदनात् ॥ मनुः.

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் இம்மூன்றுஜாதிகளுக்கும் முதல் வருஷத்திலாவது மூன்றுவதாண்டிலாகிலும் चूडाकर्म சிகை வைக்கவேண்டுமென்று மனு முதலியவர்கள் கூறியிருப்பதற்கும் அக்காலத்தில் ஜாதிவியவஸ்தை ஏற்படாதபடியால் விரோதமாகும். அன்றியும்,

गर्भाष्टमे तु कुर्वीत ब्राह्मणस्योपनायनम् ।
गर्भादेकादशे राज्ञः गर्भात्तु द्वादशे विशः ॥ मनुः.

गर्भाष्टमे ब्राह्मणमुपनयीत ॥ आपस्तम्बः.

गर्भाष्टमेऽष्टमेवाब्दे ब्राह्मणस्योपनायनम् । याज्ञवल्क्यः.

பிராமணஜாதியிற் பிறந்த பையனுக்கு எட்டாவது வயதில் உபநயன ஸம்ஸ்காரத்தைச் செய்யவேண்டுமென்று மனு, ஆபஸ்தம்பர், யாக்ஞவல்கியர் முதலான மஹரிஷிகள் கூறும் வசனங்களும் விளங்கும். மேலும்,

शूद्राचामहत्पूर्वा जातिः । व्याकरणम् .

மஹச்சப்தத்தை ஆதியில் அடையாத சூத்திர சப்தமானது அந்த ஜாதியிலுண்டான ஸ்திரீ என்கிற பொருளைக்கருதுங்கால் சூத்திரா என்றாகிறது என்றும், இங்ஙனமே பிராமணஜாதியிற் பிறந்த மங்கை என்று சொல்லவேண்டிய விடத்தில் शार्ङ्गरवाद्यञो ङीन् என்கிற சூத்திரத்தால் பிராம்மணீ என்று கூறும் வியாகரணசாஸ்திர கர்த்தாவான பாணினியின் சூத்திரங்களோடும் விரோதிக்கும். மற்றும் ஒரு ஜாதியில் ஒரு குழந்தை பிறந்தாலும், இறந்தாலும் அவ்வக்காலங்களில் அந்தந்த ஜாதிக்குத் தக்கவாறு பலவாறாய் ஆசௌசத்தின் வியவஸ்தைகள் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டு, அனுஷ்டானத்திலும் நடைபெற்று வருகின்றன. ஒரு ஜாதியில் ஒரு சிசு பிறந்தாலும் சொற்பகாலமிருந்து அதன் குணகர்மாவைக்கொண்டு இன்ன ஜாதியென்று நிர்மாணிக்கமுடியாத தருணத்தில், மரித்துவிட்டால் இவர்கள் கொள்கையால் எங்ஙனம் நிர்மாணிக்கமுடியும்? இத்தகைய விடங்களில் சாஸ்திரத்திற்கு முரணாகவே இவர்களபிப்பிராயமிருக்கிறதென்று கூறவும் வேண்டுமோ?

இதுவரை நம் பூர்வபக்ஷிகள், ஆபாஸமான சில வசனங்களைக்கேட்டு அதன் உண்மையறியாது, அவைகள் தம் நோக்கத்திற்கு முக்கிய பிரமாணங்களென்று ஆங்காங்குகூச்சலிடும் வசனங்களை எனக்குத்தெரிந்தவரை எடுத்துக்காட்டி, அவ்வசனங்களுக்கு அவர்களது கருத்தை முன்பு நிரூபித்துப் பிறகு சாஸ்திரங்களின் கருத்திற்கும் பெரியோர்களின் கொள்கைக்கும்



விரோதமின்றி அவைகளின் உண்மையான கருத்தைக் கருதி, ஸ்மிருதி, புராணம் முதலியவைகளினின்றும் முறையே வெளியிட்டு, அவ்வசனங்களால் அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு அற்பமேனும் இடமில்லையென்பதை நன்கு நிரூபிக்கப்பட்டது. பிறகு, பிறப்பால்தான் ஜாதி என்பதற்கு ஆதாரமான பிரமாணங்களிற் சிலவற்றை யெடுத்துரைத்து சாஸ்திரங்களின் சித்தாந்தத்தை யறிவித்து, குணம், கர்மா இவைகளால் ஜாதி ஒரே ஜன்மாவில் மாறுமென்று சொல்லும் பூர்வபக்ஷிகளுக்கு விரோதமாயிருக்கும் பல பிரமாண வசனங்களையும் எடுத்துக்காட்டி, அவைகளின் பொருளையும் விளக்கியிருக்கிறோம்.

இனி இவ்விஷயத்தில் சில சாமான்னிய ஜனங்கள் கூறும் ஆபாஸமான யுக்திவாதங்களையும் விசாரித்து அவைகளுக்கும் தக்க விடையளிப்பாம்.

ஆசங்கை:—பிராமணர் முதலான வர்ணங்களைக்கூறி இவைகளுக்குள் ஒரு வகுப்பாரை உயர்ந்தஜாதியென்றும், மற்றொரு வகுப்பாரைத் தாழ்ந்தஜாதியென்றும் கருதுவதற்கு யாது காரணம்? சரீரத்தாலா? அல்லது செல்வத்தாலா? அல்லது அழகினாலா? அல்லது புத்திகூர்மையாலா? எத்தகைய காரணம் பற்றி ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரைக்காட்டிலும் சிறந்தவர்களாகிறார்கள்? தாழ்ந்த ஜாதியென்று கருதப்படுபவர்களிடத்தும் மேலே குறிப்பிட்டுள்ள சில காரணங்களிருப்பதாலும், உயர்ந்த ஜாதியென்று கருதப்படும் பிராமணர் முதலானவர்களிடத்து இக்காரணங்கள் சிலரிடத்து இல்லாமலிருப்பதாலும், மேலே குறிப்பிட்டுள்ள காரணங்களால் ஒரு வகுப்பார் உயர்ந்தவரென்றும், மற்றொரு வகுப்பார் தாழ்ந்தவரென்றும் கூறமுடியாதென்று சிலர் கருதுகிறார்கள்.

விடை:—எதாவதோர் விஷயத்திற் றனக்கு ஐயமுண்டானால் பிரத்தியக்ஷப்பிரமாண மொன்றைமாத்திரம் சரணமடைந்து அதற்கெட்டாவிடின் இதரப் பிரமாணத்தின் முகத்தைப் பார்க்கமாட்டேனென்று பாகிஸ்தமயம் கூறி, அது தவறென்

றைப்பது அறிஞர்களுக்கழகல்ல. இதைப் பிரமாணங்களையும் அவசியம் அங்கீகரிக்கத்தான் வேண்டும். அவ்விதமங்கீகரித்தே நாம் பல காரியங்களையும் நடத்துகிறோம். அதாவது, ஒவ்வொரு தினமும் காலையிலும், மாலையிலும் நதி அல்லது குளங்களுக்கு ஜலம் எடுப்பதற்காகப் புறப்படுங்காலத்தில் பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் ஜலம் இருப்பதை முதலில் தெரிந்துகொண்டுதானா ஜலமெடுக்கப் புறப்படுகிறோம்? அல்ல. நேற்றைதினம் நாம் போய் ஸ்நானம் முதலியவை செய்து தீர்த்தமும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். அவ்விதமே இன்றையதினமும் போனால் எடுத்துவரலாமென்கிற அநுமானப் பிரமாணத்தைக்கொண்டு அங்கு சென்று காரியசித்தியையுமடைகிறோம். இதையோ சில சமயங்களில் ஆப்தர்களுடைய வார்த்தைகளாகிற சப்தப்பிரமாணத்தாலும் அறிகிறோம். இவ்விதமன்னியில், பிரத்தியக்ஷத்தைமாத்திரம் அங்கீகரிக்கிறவர்களுக்கு ஒருகாரியமும் கைகூடாது. தவிர, யாவருக்காகிலும் வயிற்றுநோவு உண்டாகி அவன் கஷ்டப்படுங்கால், பிரத்தியக்ஷப் பிரமாணத்தாலறிந்து பிறகா சிகித்ஸைசெய்கிறோம்? இல்லை. அவன் வார்த்தையாகிற சப்தப்பிரமாணத்தால் மாத்திரமே ஔஷதங்களை உபயோகிக்கிறோம். மற்றும் சில காரியங்களில் பிரத்தியக்ஷத்தைப் பலயில்லையென்று விட்டுவிட்டுச் சப்தப்பிரமாணத்தையே பெரிதாய் எடுத்துக்கொள்கிறோம். அதாவது:— மார்க்கத்தில் நாம் செல்லும்பொழுது கண்ணிற்கு தீர்த்தம் பள்ளத்திலிருப்பதால் இவ்விடத்தில் இல்லையென்று நன்றாய்த் தெரிந்திருந்தும், எதிரில்வரும் ஆப்தவாக்கியமாகிற சப்தப்பிரமாணத்தால் இருக்கிறதென்றறிந்து பிரத்தியக்ஷத்தைவிட்டு அவ்விதமே அங்குச்சென்று தீர்த்தத்தையடைகிறோம். மற்றும் நம் ஜனங்களுக்கு இதர வியாதி உண்டானால், அவர்கள் வார்த்தையை நம்பியே சிகித்ஸை முதலானவைகள் செய்கிறோம். இவ்விதம் பலவுள. ஆகையால் பிரத்தியக்ஷப்பிரமாணத்தால் தீர்மானிக்கமுடியாத விஷயங்களை இதரப் பிரமாணங்களால்தான் அறிந்துகொள்ளவேண்டுமேயன்றி, பிரத்தியக்ஷத்



தால் தீர்மானிக்க முடியாதிருப்பதால் அது சரியல்லவென்று சொல்வது தவறு. ஆகையால் இந்த விஷயத்தில் அற்ப அறிவுடைய நம்போன்றவர்களுடைய சிற்றறிவிற்கெட்டாவிடினும் தபோமஹிமையால் விசேஷ ஞானசக்தியையடைந்த கருணாநிதிகளாகிய நம்முன்னோர்களான மகரிஷிகளால் லோகோபகாரார்த்தமாய் வெளியிடப்பட்ட ஸ்மிருதிகளாலும் மகேசுவரனுடைய ஆக்ஞாரூபங்களான அநாதியாய் விளங்கும் வேதவாக்குகளாலும் இவர் சிரேஷ்டர்களென்று வெளியாகிறது. அதெப்படியெனில் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, என்கிற இந்நான்கு ஜாதிகளுக்குள் முன்னே இருப்பவர்கள் ஜன்மாவினால் சிரேஷ்டர்களென்று,

चत्वारो वर्णाः ब्राह्मणक्षत्रियवैश्यशूद्राः तेषां पूर्वः पूर्वः जन्मतः श्रेयान् ॥

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், என்று நான்கு ஜாதிகளுண்டு. அவற்றுள் சூத்திர ஜாதியிலிருந்து முறையே மேன்மேலுமிருப்பவர்கள் பிறப்பால் சிறந்த ஜாதியென்று ஆபஸ்தம்பர் கூறுகிறார். மற்றும் பிர்மாவானவர் ஆதியில் தான், தபஸ் செய்து, உத்தமாங்கமான முகத்திலிருந்து ஹவ்யகவ்யம் முதலானவைகளை வகிக்கவேண்டுமென்றும், உலகம் பூராவையும் ரக்ஷிப்பதற்காகவும் பிராமணர்களை சிருஷ்டித்தாரென்றும், இவர்கள்தான் எல்லோருக்கும் பிரபுவென்றுங்கூறப்பட்டிருக்கிறது. மேலும், எந்த பிராமணர்களுடைய முகத்தினால் தேவதைகள் ஹவிஸ்ஸையும் பிதுர்க்கள் கவ்யத்தையும் சாப்பிடுகிறார்களோ அவ்வித பிராமணர்கள் சிரேஷ்டர்களென்பதற்கு இதைக்காட்டிலும் வேறு அத்தாட்சி என்னவேண்டுமென்று மநுவும் சொல்லியிருக்கிறார். அதாவது,

उत्तमाङ्गोद्भवाज्ज्यैष्ठ्याद्ब्रह्मणश्चैव धारणात् ।
सर्वस्यैवास्य सर्गस्य धर्मतो ब्राह्मणः प्रभुः ॥

तं हि स्वयंभूस्स्वादास्यात् तपस्तप्त्वादितोऽसृजत् ।
हव्यकव्यादिवाहाय सर्वस्यास्य च गुप्तये ॥
यस्यास्येन सदाश्नन्ति हव्यानि त्रिदिवौकसः ।
कव्यानिचैव पितरः किं भूतमधिकं ततः ॥

என்றும், இவ்விதமே யாக்ஞவல்க்யமஹரிஷியும் சொல்லியிருக்கிறார். சாதாதபஸ்மிருதியிலும் பிராமணனானவன் ஜன்மாவினாலேயே மிகவும் பாக்கியசாலியாகிறானென்றும், எல்லா ஜாதிகளுக்கும் சிரேஷ்டனும், மாதா, பிதா, குரு ரூபமாயும் இருக்கிறானென்றும், மேலும் எவன் எந்த இஷ்டதேவதையை ஆராதிக்கவேண்டுமென்று நினைக்கிறானோ, அவன் எதாகிலுமோர் சமயத்தில் சிற்சிலவிடங்களில் பிரகாசிக்கும் தேவதையை எதிர்பார்ப்பதைக்காட்டிலும் எப்பொழுதும் ஸமஸ்த தேவதாஸ்வரூபமாய்ப் பிரகாசிக்கும் பிராமணர்களையே ஆராதிக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சுருதிகளிலும், அந்தணரனைவரும் தேவதைகளென்றும் சகலமான தேவதைகளும் வேதமறிந்த பிராமணர்களிடம் வஸிக்கிறார்கள் என்றும் பிராமணனை தேவதையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளால் பிராமணன் தான் சிரேஷ்டனென்றும் அத்தகைய பதவிக்குக் காரணம் ஜன்மாவென்றும் தெளிவாய் உணர்த்தப்பட்டிருக்கிறது. ஸ்ரீ பரமசிவ அவதாரபூதரான ஸ்ரீ ஜகத்குரு பகவத் பாதரும்,

जन्तूनां नरजन्म दुर्लभमतः पुंस्त्वं ततो विप्रता ।

என்று பிராமணஜன்மாவே மிகவும் துர்லபமென்று விவேகசூடாமணியில் சொல்லியிருக்கிறார்கள். இவ்விஷயத்தை நிரூபிக்கும் பிராமண வசனங்கள் இன்னுமநேகமிருப்பினும் விரிவாகுமென்று விடுத்தனம். இவ்விதப் பிரமாணங்களால் பிராமணன் முதலான ஜாதிகள் பிறப்பால் ஏற்படுவன என்றும், பிராமணனே மற்றவர்களைக் காட்டிலும் சிரேஷ்டனென்றும் நன்றாய் புலப்படுகிறது. இதனால் மேலே கூறப்பட்ட காரணங்களை



தாங்கள் கூறவுமில்லை. அக்காரணங்கள் வேண்டுமென்ற அவசியமுமில்லை. ஆகையால் அந்தக் கேழ்வி தவறென்று தள்ளப்பட்டது.

பூர்வபக்ஷிகளின் 2-வது சங்கை:—

நாமெல்லோரும் ஈசுவரனுடைய ஒரே பிதாவினிடத்திலிருந்து உண்டான சகோதரர்களாகையால், ஒரு தகப்பனிடமிருந்து உண்டான சகோதரர்களான நான்கு பிள்ளைகளில் உயர்வு தாழ்வு, என்கிற ஜாதிபேதம் எங்ஙனம் அங்கீகரிக்கப்படவில்லையோ அவ்விதம் சகோதரர்களான நம் நால்வருக்குள் உயர்வு தாழ்வு என்று வேற்றுமையைக் கற்பிப்பது, அறியாமையினால் தன் ஜாதிக்கு மாத்திரம் அதிகப் பெருமை கற்பிக்கவேண்டுமென்கிற கெட்டெண்ணங்கொண்ட பிராமணர்கள் பிதற்றுகிறார்களேயன்றி எவ்விதக்காரணத்தாலும் அவர்கள் சொல்வது பொருந்தாது என்றும், மேலும் இக்காலத்தில் பிராமணர்கள் செய்யும் கெட்ட நடத்தைகளைக் கவனித்தால் சூத்திரர்களுக்கும் கீழாகக் கூடச்சொல்லவேண்டுமென்று தோன்றுகிறது என்றும் கூறுகிறார்கள்.

சமாதானம்:—

நாமெல்லோரும் ஒரே சகோதரர்களாகையால் வேற்றுமை பாராட்டக் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. தங்களை உயர்ந்தவர்களென்று சொல்லிக் கொள்ளும் பிராமணர்களால் கீழ்ப்பட்டஜாதிகளுக்கு என்ன கெடுதி நேரிடுகிறது? கீழ்ப்பட்ட ஜாதிகளிடம் கருணையுடன் அவரவர்கள் சக்தியனுஸாரமாய் உபகாரம் செய்யவில்லையா? ஆனால் இவர்கள் சாஸ்திரங்களைப் பிரமாணமாகக் கொண்டவர்களாகையால் அதன் கருத்தின்படி நடக்கவேண்டுமெனக் கருதிச் சிலவைதிக காரியங்களில் அவர்களையெதிர்பாராமல் தன் இனத்தாரைக்கொண்டு நடத்துகிறார்கள். இதுபோல் இன்னும் சிலகாரியங்களையும் சாஸ்திரத்தால் அவர்களுக்குள் நடத்திக் கொள்ளுகிறார்களே

தவிர வேறு காரணத்தாலல்ல. இதன் உண்மையை அறியாத சில ஜனங்களுக்கு இது பக்ஷபாதமாகத் தோன்றுகிறது. நன்கு கவனித்தால் இதில் யாதொரு வித்தியாச அபிப்பிராயத்திற்கு மிடமில்லை. மேலும் சாஸ்திரத்தை நம்பி அனவிரத்த திரவியத்தை நல்ல காரியத்தில் செலவிட்டு உத்தமகதியை அடைய வேண்டுமென்று பிரவிர்த்திப்பவர்கள் அதில் சொல்லியபடி செய்தால் மட்டும் அப்பயனை யெதிர்பார்க்க முடியுமே யல்லாது சிலகாரியங்களைத் தங்களிஷ்டம்போல் செய்து கொண்டால் அப்பயனை எதிர்பார்க்க எவ்விதம் முடியும்? இக்கருத்தைக் கொண்டு மாத்திரம் சிலகாரியங்களை ஒருவிதமாக நடத்துகிறார்களேயன்றி வேறுவிதமல்ல. உண்மையிவ்விதமிருக்கச் சில ஜனங்கள் பிராமணர்களுக்கு மாத்திரம் ஏன் உயர்வு என்றதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்கிற கெட்ட எண்ணத்தால் இவர்கள் பேரில் அநாவசியமாய்ச் சில தோஷங்களைக் கூறுகிறார்கள். இவைகளால், சுருதி ஸ்மிருதிகளால் இவர்களுக்கு இயற்கையில் அநாதியாய் ஏற்பட்டிருக்கும் பெருமையை எவ்வாறு விலக்க முடியும்?

தவிர, எமெல்லோரும் சகோதரர்களென்று சொன்னார். அதையும் சற்று விசாரிப்போம். நமக்குச் சகோதரத்துவம் என்றால் ஒரே பிதாவாகிய ஈசுவரனால் உண்டுபண்ணப்பட்டவர்களானபடியால் சகோதரர்களென்று சொல்லுகிறார்கள். இவ்விதம் பிறருக்குச் சகோதரத் தன்மை இருக்கவேண்டுமென்று போதிக்கும் பத்தவும் பிரியரும் தாங்களும் கொஞ்சம் வைத்துக்கொண்டிருந்தால் அழகாயிருக்கும். தன்விஷயத்தில் மாத்திரம் இதை மறந்துவிட்டதாகத் தெரிகிறது. ஏனென்றால் ஒரு பிதாவால் உண்டுபண்ணப்படும் பிராணிகள் எல்லாம் சகோதரன் தானென்று இவரபிப்பிராயப்படி ஆகைகளிடத்தும் அந்த சகோதரத் தன்மையைப் பாராட்டுவது அவசியமல்லவா? குதிரை, மாடுமுதலிய பிராணிகளும் நம்மால் சகோதரத் தன்மையைப் பாராட்டப்படத் தக்கவைதானே? பிராமணர்கள் சாப்



மாடுமுதலிய ஜீவராசிகளின் ஆக்கிராசத்தால் இதாஜாதிகளை விலக்குகிறார்களென்று இவர்களிடத்தில் பெரிய தவறென்று சகோதரத்வத்தைப் பெரிதாய்க் கூறும் நகருணாநிதிகளான இவர்கள் குதிரையின் மீது ஏறிக்கொண்டும் 20 அல்லது 30-மைல் தூரம் அதை வேகமாய் ஓட்டுவித்து, அது தாகமாய்ச் செல்லும் வண்ணம் அதைத் துன்புறுத்தியும், வண்டிகளில் பருவான பாரங்களை யேற்றி மாடுகளைக்கட்டி இழுக்கும்படி அடிக்கவும், எவ்விதம் துணிகிறார்களோ தெரியவில்லை. அவைகளை வெளியில் கட்டி வைக்கோலையும், காய்ந்த புல்லையும் ஆகாரமாய்ப்போட்டுவிட்டுத் தாம்மட்டும் உயர்ந்த சாப்பாட்டை உருந்துகிறார்களே, அஃதெங்ஙனம் நியாயமாகும்? இதோ சகோதரத்தன்மை? அன்றியும், குதிரை சவாரிசெய்யுங்காலத்திலும், வண்டியில் சுமையாய்ப் படுத்துக்கொண்டு போகும் சமயத்திலும் சகோதரத்தன்மையை மறந்துவிடுகிறார்கள்போலும். இதற்குப்பிறகும் நாங்கள் மனுஷ்யஜாதியைப் பற்றினவரையில் ஸகோதரபாவம் இருக்கவேண்டுமென்று கூறுகின்றோமேயல்லாமல் மிருகஜாதியைப்பற்றி இந்த நியமமில்லை என்று ஒருசமயம் சொல்ல முன்வருவார்களாகில் அவ்விதம் அவர்கள் கூறுவது சரியன்று. ஆகிலும் அதையும் அங்கீகரித்து அவ்விதமுரைப்பதும் தவறென்பதையும் எடுத்துக் காட்டுகிறோம்.

அதாவது ஒவ்வொரு நகரிலுமுனிஸிபால்டிசம்பந்தமாய் டவுனை சுத்திசெய்யவேண்டி மலவேலைக்காரர்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்குள் சிலர் வெளி சோட்டுகளை சுத்தம் செய்கிறார்கள். மற்றும் சிலர் கொல்லைப்பக்கங்களை சுத்தம் பண்ணுகிறார்கள், இவரபிப்பிராயப்படி இவ்விதம் மிகவும் இழிவானதாயும் பிறர் செய்யத்துணியாததுமான இந்த வேலையிலிருப்பவர்களும் நமது ஸகோதரர்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. அவ்வளவு இழிவான மனம் ஒருக்காத காரியத்தை நம் ஸகோதரர்களான அந்த வேலைக்காரர்கள் செய்வதை இவர்கள் எப்படிப் பார்த்து மனம் ஸகித்துக்கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் அந்த வேலையை அவசியம் செய்யவேண்டி

யிருக்கிறபடியால் அவர்கள் செய்கிறார்கள் என்று சொல்லுவது தவறு. அவசியமான காரியமாயிருந்தாலும் அவர்கள் சிலகாலமும் இவர்கள் சிலகாலமுமாய் நடத்தக்கூடாது. அவர்கள் இதை செய்கிறார்களேயன்றி இவர்கள் ஒருசமயத்திலும் அந்தக்காரியத்தைச் செய்கிறதில்லை. ஒருசமயம் அந்த வேலையால் அவர்களுக்கு அதிகப்பெருமையை நாம் கொடுப்பதாக இவர் நினைத்தாலும் அது சரியல்ல. அது மிகவும் இழிவான காரியமென்று உலகப்பிரஸித்தம். இவ்விதம் பல உதாரணங்கள் இருக்கின்றன. இவைகளுக்கு மௌனம் ஸாதிப்பதைத் தவிர சரியான விடை இவர்களால் அளிக்கமுடியாதென்பது திண்ணம். இவைகள் இவருக்கிருக்கும் ஸகோதரஸ்நேகத்தைச் சற்றும் எவ்விடமாவது பிராமணர்களிடமில்லை. அது தவறு. என்று எங்களைச் சொல்லத்துணிந்தாரோ தெரியவில்லையே. சாஸ்திரங்கள் எல்லாப் பிராணிகளுக்கு எதை செய்யவேண்டுமென்றும் எதை விலக்க வேண்டுமென்றும் சொல்லுகின்றனவோ அதைச்செய்யவும் விலக்கவும் நாம் கடமைப்பட்டவர்களாகிறோமேயன்றி இதில் பக்ஷபாதம் செய்வது தவறாகும்.

பிராமணர்கள் கெட்ட காரியங்களைச்செய்கிறார்களென்று சொன்னார். அதையுங்கவனிப்போம். சாஸ்திரத்தால் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் பிராமணத்தன்மை அநுஷ்டானத்தினும் விலக்கப்படலாமேயன்றி இவர்கள் கெட்ட காரியமென்று சொல்வதனால் அது விலகாது. ஆதல்பற்றியே தர்மசாஸ்திரத்தில்

विद्यातपोभ्यां हीनस्तु जातिब्राह्मण उच्यते ।

வித்தை, தவம் இவைகளில்லாத பிராமணன் ஜாதிப்பிராமணன் அதாவது ஜாதியினால்மட்டும் பிராமணன் என்றும், பின்னும் ஆபத்துக்காலத்தில் சிலதொழில்களை பிராமணன் செய்தாலும் தோஷமேற்படாது.

अजीवंस्तु यथोक्तेन ब्राह्मणः स्वेन कर्मणा ।
जीवेत्क्षत्रियधर्मेण स ह्यस्य प्रत्यनन्तरः ॥ मनुः.



பிராமணன் சாஸ்திரங்களில் தனக்கு அனுஷ்டிக்கும்படி ஸ்வ தர்மமாகக் கூறப்பட்ட தர்மானுஷ்டானத்தால் ஜீவிக்கமுடியாவிட்டால் அடுத்த க்ஷத்திரியஜாதியின் தர்மத்தை அவலம்பித்து ஜீவிக்கலாம். மநு 10.

उभाभ्यामप्यजीवंस्तु कथं स्यादिति चेद्भवेत् ।
कृषिगोरक्षमास्थाय स जीवेद्वैश्यजीविकाम् ॥

பிராமணனுக்குத் தனக்குரிய தர்மத்தாலும் அடுத்த க்ஷத்திரிய ஜாதியின் தர்மத்தாலும் ஜீவனம் செய்ய முடியாவிடில் அதற்கடுத்த வைசியஜாதிக்குரிய கிருஷி, கோரக்ஷணம் முதலிய கர்மாக்களால் ஜீவிக்கலாம். மநு 10.

श्मशानेष्वपि तेजस्वी पावको नैव दुष्यति ।
हूयमानश्च यज्ञेषु भूय एवाभिवर्धते ।
एवं यद्यप्यनिष्टेषु [कुत्सितकर्मसु] वर्तन्ते सर्वकर्मसु ॥
सर्वथा ब्राह्मणाः पूज्याः परमं दैवतं हि तत् ॥ म-9

அக்கினியானது முதுகாட்டிலிருந்தாலும் யாதொரு தோஷத்தையும் அடையாமல் வேள்விகளில் ஹோமம் செய்யுங்கால் மறுபடியும் எங்ஙனம் விருத்தியடைகின்றதோ அங்ஙனமே பிராமணர்கள் கெட்ட கர்மாக்களைச் செய்தாலும் அக்காலத்திலும் பூஜிக்கத்தகுந்தவர்கள்தான். பிராமண்யமென்பது சிறந்த தேவதாஸ்வரூபமாகையால் கெட்ட கர்மாவைச் செய்தாலும் அந்த ஜன்மத்தில அவர்களை விட்டு நீங்காது என்று 9-ஆவது அத்தியாயத்தில் மநு சொல்லியிருக்கிறார். ஆகையால் சாஸ்தீரியமான கெட்ட காரியத்தை அவன் செய்தாலும் சூத்திரனாக மாட்டான். சாஸ்திரங்களில் அவனைச் சூத்திரனாகச் சொல்லப்பட்டிருந்தாலும். அவன் சூத்திரஸ்திரீயை விவாஹம் செய்து கொள்ளவும், அவர்கள் பக்குவம் செய்ததைச் சாப்பிடவும்வேணுமென்கிறகருத்தல்ல. மற்றென்னவெனின் அத்தகையோன் வைதீககர்மாவிற்கு அருகனில்லையென்றும் அவனுடைய சம்பந்

தம் பிராமணர்களுக்குக் கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் இவர்களபிப்பிராயம் சரியல்லவென்று புலப்படுகிறது. மேலும், சில தவறுகளுக்குப் பிராயச்சித்தம் பண்ணினால் தோஷம் விலகிவிடுமென்று சொல்லியிருக்கிறது. சூத்திரனுக்கு எவ்வளவு பிராயச்சித்தம் செய்தாலும் அவன் பிராமணனாகமுடியுமா? ஆகவே இதுவும் தவறு.

பலபிரமாணங்களுக்கு விரோதமாயிருப்பினும் அதைக்கவனியாமல் குணகர்மாவினாற்றான் ஜாதிப்பிரிவென்று கூறுபவர்களுக்கு யாதுபயன் சித்திக்கின்றதென்பதை இனி விசாரிப்போம்.

உலகில் प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते ।

அறிவில்லாதவனாயிருந்தாலும் யாதொரு பயனையும் கருதாமல் ஒருகாரியத்திலும்செல்லமாட்டானென்றுசான்றோர்சாற்றியிருப்பதால், நம் பூர்வபக்ஷிகளும் சிறந்த பயனை யுத்தேசித்தே இவ்விதம் சொல்லுகிறார்கள் என்று கூறவேண்டும். மனிதர்களுக்கேற்படும் பலன் இருவகைத்தாகும். அவையாவன 1.திருஷ்டபலம், 2.அதிருஷ்டபலம் தன் பிறப்புமுதல் மரணம் வரையில் எந்தெந்த சமயத்தில் எவ்விதபலத்தை அநுபவித்தாலும் அவையாவுந் திருஷ்டபலமெனப்படும். அதாவது இம்மைப் பயனென்று பொருள்படும். இப்பயன் அவர்களுக்கு உண்டானன்றல், குணகர்மாவால் ஜாதியென்று சொல்வதனால் ஒருவிதமான பயனும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் சிலர் பிறப்பால் தான் ஜாதி ஏற்படுகிறதென்று கூறி தாழ்ந்த ஜாதியிலிருக்கும்ஜனங்களுக்கு எத்தகையசிறந்த குணகர்மாக்களிருப்பினும் அவர்கள் உயர்ந்த ஜாதியாகமாட்டார்களென்று விலக்கிவேற்றுமைப்பாராட்டுவதால், ஒற்றுமை குன்றி, விரோதமேற்பட்டு பலபிரிவுகளுண்டாகி அதனால்நமது தேச க்ஷேமம் குன்றி, அதனால் ஜனங்கள் பல்வேறு கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். இவ்விதமன்றி அவரவர்களுடைய குண



கர்மாக்களையநுசரித்து ஜாதி ஏற்படுத்தினால் எல்லா ஜனங்களும் எல்லா ஜாதியாகவும் ஆகலாம். விரோதமும் கக்ஷியும் ஏற்படா. எல்லோரும் ஒற்றுமையுடன் வாழலாம். தேசத்திற்கு க்ஷேமமுண்டாகும். ஸ்வராஜ்யஸித்தியும் பெறலாம். இதைக்காட்டிலும் வேறு பலன் என்ன வேண்டும் என்று கூறுகிறார்கள்.

நம் தேசத்தில் பிறப்பால் ஜாதிப்பிரிவு என்கிற வியவஸ்தை ஏற்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இவ்விதமே நடைபெற்று வருகிறதென்று பலரும் அங்கீகரிக்கத் தக்கதே. முற்கூறியபடி தசரதன் அரசு புரியுங்கால் ஓர் நாள் வேட்டைக்குச் சென்றவிடத்து யானையென்று பிரமித்து ஓர் ரிஷியையடித்து அவர் மாணுவஸ்தையிலிருக்குங்கால், பிர்மஹத்தி தோஷம் தனக்கு வந்து விட்டதென்று கஷ்டப்படும் தசரதனை அவர் பார்த்து, 'நான் பிராமண ஜாதியல்ல' ஆகையால் உனக்கு பிர்மஹத்தி தோஷமில்லையென்று சொல்லியிருப்பதாக ஸ்ரீமத் ராமாயணத்திலும் சொல்லப் பட்டிருப்பதால் பல்லாயிரம் வருஷங்களாக இதுநடைபெற்று வருகிறதென்றே தெரிகிறது. இந்த ஜாதிபேதமானது நம் தேச க்ஷேமத்திற்கு இடையூறாயிருக்கிறதென்று தற்காலத்திய புத்திமான்கள் கருதுகிறபடி உண்மையாயிருப்பின், எக்காலத்தில் ஜாதிபேதமேற்பட்டதோ அதுமுதற் கொண்டே நம் தேசத்தின் கஷ்ட நிலைமைக்குக் காரணமாயிருக்க வேண்டும். சில வருஷங்களுக்கு முன் நன்கு சுவையுடன் கூடிக் கொண்டிருந்தது. இப்பொழுது கசப்பாயிருக்கிறதென்று சரியான புத்தியுள்ளவனும் சொல்ல மாட்டான். ஆகையால் முற்காலங்களில் இத்தகைய ஜாதிப் பிரிவால் தேச க்ஷேமத்திற்குக் குறைவேற் பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் இக்காலத்திய மேதாவிகள் போல் முற்காலத்தவர்களுக்குக் காரிய காரணங்களை நன்கு பகுத்தறியும் புத்தி சக்தியில்லாதபடியால் அவர்கள் இதை யறியவில்லை யென்று சாதிப்பதும் தவறு. இப்பொழுதிருப் பவர்களைக் காட்டிலும் முன்னிருந்தவர்கள் தேவதைகளின் அம்சாவதாரமென்றும்,

எல்லா விஷயங்களிலும் விசேஷ சக்தி வாய்ந்தவர்களென்பதும் நாம் நேரில் பார்த்து அறியாவிட்டாலும் அவர்களின் சரித்திரத்தைக் கூறும் பாரதம், ராமாயணம் முதலிய கிரந்தங்களால் நன்கு வெளியாகின்றது. தசரதர் அர்ஜுனன் முதலான மன்னர்கள் தேவலோகம் சென்று இந்திரனுக்கு வேண்டிய ஸஹாயம் செய்து கொடுத்திருக்கிறார்களென்றால் அவர்களுக்கு எத்தகைய புத்தி சக்தி யிருக்குமென்று நம் போன்றவர்கள் மனதாற்கூட நினைக்க முடியாது. அவ்வித மஹான்களில் ஒருவராவது ஜாதிப்பிரிவால் தேசத்திற்கு க்ஷேமக்குறை நேர்ப்பட்டிருக்கிறதென்று கண்டு பிடித்ததாகத் தெரியவில்லை. மேலும் அக்காலங்களில் பிறப்பாலேற் பட்ட ஜாதிவ்யவஸ்தையையும் அந்த ஜாதிக்கு ஸ்வதர்மமாய்ச் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மானுஷ்டானங்களையும் நியமம் தவறாது அவரவர்களையும் நன்கு அனுஷ்டிக்கும்படி அவ்வக் காலங்களிலிருந்த தேச மன்னர்கள் ஜனங்களுக்குப் போதித்து வந்திருப்பதாகவும் தெரிகின்றது. ஆகையாற்றான் கீதையில் அர்ஜுனனின் பொருட்டு,

स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ।

"க்ஷத்திரியனாகப் பிறந்த உனக்கு அனுஷ்டிக்க வேண்டுமென்று ஸ்வதர்மமாக சாஸ்திரங்களிற் சொல்லிய உன் தர்மத்தை அனுஷ்டிக்குங்கால் உனக்குத் தவறு நேர்ந்தாலும் சிரேயஸ்ஸின் பொருட்டேயாகும். அன்னிய ஜாதியின் தர்மத்தை நீ அனுஷ்டித்தால் பயத்திற்கு இடமாகுமென்று பகவான் கூறியிருக்கிறார்." இவ்விதம் முற்காலத்தில் பிறப்பாலுண்டான ஜாதிப்பிரிவையும் அதற்குரிய தர்மானுஷ்டானங்களையும் நன்கு பரிபாலிப்பதே அரசர்களின் கடமையென்றும் அதனாற்றான் ஜனங்களுக்கும், தேசத்திற்கும் க்ஷேமமுண்டாகுமென்றும் வெகு காலமாய் வழங்கி வருவதை விலக்கி, தற்காலத்தில் ஜாதிப்பிரிவானது நம் தேச க்ஷேமத்திற் கிடையூறாகிறதென்று ஒன்றையும் யோஜியாமல், கலியாசரின் பலம் நடக்கிறதென்று தெரியாமற் பறையறைகிறார்களே. அறிவிற் சிறந்த ஆஸ்திகர்கள்! மற்றொரு விஷயத்திற்குச் சற்று செவிசாய்ப்பீர்களென்று



நம்புகிறேன். அஃதாவது, பூர்வ பக்ஷிகளின் அபிப்பிராயப்படி ஜாதிப்பிரிவே நம் தேசமுன்னேற்றத்திற்குப் பாதகமாயிருப்பின் இத்தகைய ஜாதிப் பிரிவில்லாத விடங்களில், ஜாதிப் பிரிவால் நம் தேசத்திற்கு எவ்வித கஷ்டங்கள் ஏற்படுகின்றனவென்று இவர்கள் கருதுகிறார்களோ அவைகள் அங்கு இல்லாமலிருக்கின்றனவா? என்று பார்ப்போமாகில் இங்கிலாந்து ஜர்மனி பெல்ஜியம் பிரான்ஸ் முதலிய இடங்களில் இத்தகைய ஜாதிப் பிரிவு யில்லை யென்றே யாவருக்கும் தெரிந்த விஷயம். அந்த தேசங்களில் அவர்களுக்கிருக்கும் ஒற்றுமையையும் தேசக்ஷேமத்தையும் கொஞ்சம் கவனித்தால் ஒருவருக் கொருவர் சத்ருவாகவிருந்து லக்ஷக் கணக்கான ஜனங்கள் யுத்தத்தில் மாண்டு போகிறார்கள். இதனால் அந்த தேசங்களுக்கிருக்கும் க்ஷேமத்தையும், முன்னேற்றத்தையும் நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம். அதைக் கவனித்தால் நம் தேசத்தில் வர்ணாச்ரமதர்மவ்யவஸ்தையை முற்றும் மாறாமல் இன்னும் சிற்சில விடங்களில் ஒளித்து கொண்டாவது ஜீவித்திருப்பதாற்றான் நம் தேசத்திற்கு அவ்விதம் அதிகமான கஷ்டங்களும் கஷ்டங்களும் மரணங்களும் நேராமலிருக்கிறதென்று நன்கு புலப்படவில்லையா? ஆங்காங்கு நேரும் அற்ப கஷ்டங்களுக்கு காரணம் வர்ணாச்ரமதர்மம் சரிவர அனுஷ்டிக்கப் படாமையே யென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். 'ஜாதி நோக்கில் பிறப்பாலேயே உயர்வு தாழ்வு உண்டு என்பது நிலைபெற்றே தீரும்' என்று சில மேனாட்டு நிபுணர்கள் கூறுவதும் இங்கே கவனிக்கத் தக்கது.

இந்த தர்மங்களைச் சரியாய் நடத்தி வந்த முற்காலத்தில் தேசமெங்கும் செழித்துச் சுகமாயிருக்கவும், அவைகளைக் கைவிட்ட இக்காலத்தில் நேரும் சிற்சில கஷ்டங்களைக் கவனித்தால் தர்மக்குறைவாற்றென்று சொல்லவும் வேண்டுமோ?

மேலும் குணம் கர்ம இவைகளால் ஜாதிப்பிரிவு என்று கூறும் கலிகால மஹரிஷிகளை ஒன்று கேட்கிறோம். எவ்வளவு குணங்கள்? கர்மாக்கள் எவை? அவைகள் இருக்கவேண்டிய காலம் எது முதல் எது வரை? இருபது வயது வரையில்

முட்டாளாய் இவர்களெதிர் பார்க்குங் குணமில்லாமல் சூத்திர ஜாதியாயிருந்து, இரண்டு குழந்தைகள் ஏற்பட்ட ஒருவன் அதற்குப் பிறகு சிறந்த குணகர்மாக்களை யடைந்து மேலான க்ஷத்திரிய ஜாதியையோ அல்லது பிராம்மண ஜாதியையோ அடைந்துவிட்டால் அவனுக்கு முன் சூத்ரனாயிருக்கும் சமயத்திலேற்பட்ட சூத்திரஸ்திரீயையும் குழந்தைகளையும் சேர்த்துக்கொள்கிறதா? இல்லையா? சேர்த்துக்கொண்டால் அவர்கள் பிராமணஜாதியா? அல்லது சூத்திர ஜாதியா? பெண் குழந்தையாயிருந்தால் அதை எந்த ஜாதியில் விவாஹம் செய்து கொடுக்கிறது? இவ்விதம் கீழ்ஜாதியிலிருந்து மேல்ஜாதியை யடைந்தவொருவன் அற்பகாலஞ் சென்றபிறகு குணங்களையுங் கர்மானுஷ்டானங்களையும் விட்டுவிட்டால் அவனைத் தற்காலமிருக்கும் பிராமண ஜாதியிலேயே வைக்கிறதா? அல்லது குணகர்ம இல்லாதபடியால் கீழ் ஜாதிக்குத் தள்ளி விடுவதா? அப்படிச் செய்யின் மேல் ஜாதியிலிருக்கும் பொழுது அதே ஜாதியிலுள்ள ஒரு ஸ்திரீயை விவாஹம் செய்து அவளுக்குச் சந்ததிகளேற்பட்டிருந்தால் அவர்களையும் கீழ் ஜாதிக்குத் தள்ளிவிடுகிறதா? அல்லது மேல் ஜாதியிலேயே வைக்கிறதா? வைசிய ஜாதியிலே பிறந்தவொருவன் தன் குணகர்மாவால் பிராமணஜாதியை யடைந்து சில வருஷங்களிருந்து மறுபடியும் கெட்ட நடத்தையால் சூத்திர ஜாதியாக மாறிப்பிறகு மரித்தால் ஜன்ம சித்தமான வைசியஜாதியிலிருக்கும் புத்திரனும், குணத்தாலடைந்த பிராமண ஜாதியிலேற்பட்ட புத்திரனும், மரணகாலத்திலிருந்த சூத்திர ஜாதியிற் பிறந்த புத்திரனும் தன் பிதாவிற்குச் செய்யவேண்டிய பரலோகக் கிரியைகளை அவன் எந்த ஜாதி, எந்த கோத்திரமாகத் தீர்மானித்து நடத்துகிறதென்று கருதுகிறார்களோ தெரியவில்லை. இன்னும் இவ்விஷயத்தில் பூர்வபக்ஷிகளால் சரியான விடையளிக்கமுடியாத பல சிறுக்களிருப்பினும் விரிவிற்கஞ்சி விடுத்தனம். இதுவரையில் கூறிய விஷயங்களால், சாஸ்திர விரோதமாயிருந்தாலும் தேசக்ஷேமத்தைக் கருதி குணகர்மாக்களால் ஜாதிப் பிரிவையங்கீகரிக்க வேண்டுமென்று பூர்வ பக்ஷிகள் கருதுவது



முற்றிலும் தவறென்றும், அற்பங்கூட லோகக்ஷேமம் ஏற்பட நியாயமில்லையென்றும், நன்கு கவனித்தால் கஷ்டத்திற்குத் தான் காரணமாகிறதென்றும் வெளியிடப்பட்டது.

இரண்டாவதான பரலோகத்திற்குரிய சகாயமாவது இதனாலடையப் படுமோ வென்று கவனித்தால் சிவ! சிவ! பரலோகமென்ற வார்த்தையைக் கூடச்சொல்ல நியாயமில்லை. ஏனெனின், பரலோகம் ஒன்று உண்டென்றும், மரித்தபிறகு அவரவர்களும் பாபபுண்யங்களுக்குத் தக்கவாறு சுகதுக்கங்களை யனுபவிக்க வேண்டுமென்றும் பிரத்தியக்ஷத்தில் ஒருவரும் அறிந்ததில்லை. சாஸ்திரங்களின் வாயிலாகவே அறிந்து கொள்ள வேண்டும். அவைகளில் பரலோகஸாதனங்களாய்க் கூறப்பட்டிருக்கும் வர்ணாச்ரம தர்மங்கள், வேறு. தற்காலம் இவர்கள் கூறுவது வேறு. இவ்விரண்டிற்கும் இரவும் பகலும்போல ஒன்றுக்கொன்று சம்பந்தமேயில்லை. இவர்கள் புதிதாக ஸ்மிருதி ஏற்படுத்தி அதிலிருக்கிறதென்று கூறலாம். அதை ஜனங்களும் அங்கீகரிக்க வேண்டும். இவ்விதமன்றி பிராசீனமான சுருதிஸ்மிருதிகள் அற்பங்கூட இவர்கள் மதத்தை ஒப்புக்கொள்ளாமல் இவ்விதமனுஷ்டித்தால் நரகத்திற்கு இரையாகிறாரென்றும் ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றனவென்று சென்ற பிரகரணங்களில் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் மறுமைப் பயன் கிடைப்பது அரிதினும் அரிது.

இவ்விதம் இம்மை மறுமை என்கிற இருவகையான பயனிலும் ஒன்றையாவது எதிர்பார்க்க முடியாததாயும் சாஸ்திர சிஷ்டாசாரங்களுக்கு விரோதமாயுமுள்ள குணகர்மாவால்தான் ஜாதிப்பிரிவென்றும் பிறப்பாலில்லையென்றும் தாங்களாக ஒரு சித்தாந்தத்தைச் செய்து கொண்டு இந்த தேசத்தில் நிலை நாட்டுவதே தர்மஸ்தாபனமெனக்கருதி நாலு ஜனங்கள் கூடுமிடங்களிலெல்லாம் சாஸ்திரங்களையும் பெரியோர்களையும் அனாவசியமாய் நிந்தித்துப் பெருங்கூச்சலுடன் ஸ்வஸித்தாந்தத்தை உபந்யஸித்து அறிவில்லாத ஸாமான்யஜனங்களை எதற்காக வஞ்சிக்கிறார்களோ தெரியவில்லை.

1/592
1822

ஓ ஜனங்களே! ஒரு பிராமணனத்திலும் கட்டுப்பட்டு அவர்களிஷ்டப்படி தோன்றியவாறு வெளியிட முன் வந்திருக்கும் இவர்களுடைய வாக்காகிறவலையில் சிக்குண்டு ஜன்மாவையும் ஸநாதநதர்மத்தையும் கெடுத்துக்கொண்டு வீணில் ஈசத்திற்கிரையாகாமல் அவரவர்களும் ஸத்குருக்களின் மூலமாய் சாஸ்திரங்களின் தத்வார்த்தங்களை நன்கறிந்து அநுஷ்டித்து ஈசுவராநுக்கிரகத்திற்குப் பாத்திரராகி விசேஷமான ஸ்ரேயஸ்ஸையடையவண்டுமாய் தெரிவிக்கப்படுகிறது. சுபம்!

श्रीकाञ्चीकामकोटीश्वरभुवनगुरुप्रोज्ज्वलत्पादसेवा-
सञ्जातानुग्रहात्तामलनिजधिषणः शास्त्रसिद्धान्तमेवम्।
शास्त्री पञ्चापगेशः प्रकटयति भृशं क्षेमहेतोर्जनाना-
मेतं सर्वे विदित्वा हतकुमतिमताः सत्पथे यान्तु नित्यम् ॥

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாய் விளங்கும் ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளவர்களுடைய பாதகமலங்களின் சேவையால் உண்டான திவ்யாநுக்கிரகத்தால் அடையப்பட்ட நிர்மலமான புத்தியையுடைய பஞ்சாபகேச சாஸ்திரியானவர் ஜனங்களுடைய க்ஷேமத்தையே பெரியதாய் கருதி இந்தப்பிரகாரம் ஜன்மாவினால் ஜாதிப்பிரிவேயன்றி வேறு விதம் ஏற்படமுடியாதென்கிற சாஸ்த்ர ஸித்தாந்தத்தை வெளியிட்டிருக்கிறார். உண்மையான இந்த ஸித்தாந்தத்தை எல்லா ஜனங்களும் நன்கறிந்து இதற்கு விபரீதமாய் கூறும் குமதிகளுடைய ஸித்தாந்தத்தைத் தவறென்று தள்ளிவிட்டு சாஸ்திரீயமான [illegible]த்தில் எப்பொழுதும் செல்லட்டுமென்று ஸ்ரீ[illegible]ப்ரார்த்தனையுடன் இந்த கிரந்தத்தை பூர்த்திசெய்கிறார். சுபம்!